வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 16.06.2022 வியாழக்கிழமை | இதழ் : 192 | பக்கங்கள் : 16

# நான் பொலிஸ் அமைச்சரானால் அரசில் உள்ள சகலரும் சிறைக்கு!

## சரத் பொன்சேகா எம். பி. கூறுகிறார்



**கொழும்பு, ஜூன். 16**

**நாட்டின் நிலைமை தொடர்பாக பிரதமரிடம் எந்த திட்டமும் இல்லை என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

கம்பஹாவில் நேற்று புதன்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், அரசாங்கம் மக்களை நிரந்தரமாக ஏமாற்றி வருகிறதெனக் குறிப்பிட்டார்.

மேலும் இதன்போது, பிரதமரின் அரசாங்கத்தில் அமைச்சுப் பதவியேற்று ஊழல்வாதிகளை தண்டிக்க விருப்பம் இல்லையா எனக் கேள்வியெழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த அவர், "நான் பொலிஸ்

15

# மருந்து தட்டுப்பாட்டுக்கு ஆறு வாரங்களில் தீர்வு!

## சுகாதார அமைச்சு நம்பிக்கை

கொழும்பு, ஜூன் 16

நாடளாவிய ரீதியிலுள்ள மருத்துவமனைகளில் நிலவும் மருந்து தட்டுப்பாட்டை எதிர்வரும் 6 வாரங்களுக்குள் முழுமையாக நிவர்த்தி செய்ய முடியும் என்று சுகாதார அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

மருந்துகளை கொண்டுவருவதற்குத் தேவையான நிதி கிடைத்துள்ளதாக அமைச்சர் கெஹ

15

# எரிவாயு ரூ. 200ஆல் உயரும்?

கொழும்பு, ஜூன் 16

சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையை 200 ரூபாயால் அதிகரிக்குமாறு அதிகாரிகளை கேட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முடித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

லிட்ரோவின் விலை லாப் நிறுவனத்தின்

15

# அவுஸ்திரேலியா செல்ல முயன்ற 64 பேர் கிழக்குக் கடலில் கைது!

திருமலை, ஜூன் 16

சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயற்சித்த 64 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை கடற்பரப்பில் நேற்று அதிகாலை இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று கடற்படை பேச்சாளர் கெப்டன் இந்திக டி சில்வா தெரிவித்தார்.

50 ஆண்களும்

15

# அரசியல் ஆட்டங்களால் ஆபத்தில் 21ஆம் திருத்தம்!

## எதிர்க்கட்சி தலைவர் விசனம்

கொழும்பு, ஜூன் 16

நாட்டில் அரங்கேறும் அரசியல் ஆட்டங்களால் அரசமைப்பின் 21 ஆவது திருத்தம் ஆபத்தில் உள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்றுத் தெரிவித்தார்.

நேற்று தனது அலுவலகத்தில் மறுசீரமைப்புக்கான பிரதிநிதிகள் குழுவை சந்தித்துப் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், நீதி அமைச்சரின் 21ஆவது திருத்தம், அரசின் 21ஆவது திருத்தம், எதிர்க்கட்சியின் 21ஆவது திருத்தம் என எது

15

# இலங்கைக்கு உதவுவேன் அமெரிக்க ஜனாதிபதி உறுதி!

கொழும்பு, ஜூன் 16

இலங்கைக்குத் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குவேன் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளாரென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வாஷிங்டனில் தூதுவர்களை சந்தித்த ஜோ பைடன் இலங்கைக்கான தூதுவர் மஹிந்த சமரசிங்கவிடம் மேற்கண்ட உறுதி மொழியை அளித்

15

# மூன்று ஆண்டுகளுக்கு மின்வெட்டு தொடரும்!

கொழும்பு, ஜூன் 16

நாட்டின் பொருளாதார நிலைமை காரணமாக இன்னமும் மூன்று ஆண்டுகளுக்கு மின்வெட்டை நாடு எதிர்கொள்ள நேரிடும் என்று இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

15

# எரிபொருள் வழங்கக் கோரி வவுனியாவில் வீதி மறியல்!

வவுனியா, ஜூன் 16

வவுனியாவில் எரிபொருள் கோரி பொது மக்கள் வீதியை வழிமறித்தமையால் பதற்றமான சூழல் ஏற்பட்டது.

வவுனியாவில் நேற்று காலை அனேகமான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், மன்னார் வீதி சந்தியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக நேற்று காலை 6 மணிமுதல் பெற்றோலை பெற்றுக் கொள்வதற்காக நீண்டவரிசையில் பொதுமக்கள் கூடி

15



வலி. வடக்கு பிரதேசத்தில் இருந்து மக்கள் வலிந்து இடம்பெயர்ந்து 32ஆவது ஆண்டு நிறைவையொட்டி தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் நேற்று சிறப்பு வழிபாடு இடம்பெற்றது.

# 12 கோடி டொலர்கள் கடன் வழங்குகிறது அமெரிக்கா

கொழும்பு, ஜூன் 16

அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள் சபை இலங்கைக்கு 12 கோடி டொலர்கள் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 4,318 கோடி ரூபாய் வழங்குவதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்

15

# இலங்கையில் ஆட்சி மாற்றம் இன்று மிகவும் அவசியமானது

## வலியுறுத்துகிறார் சம்பந்தன்



கொழும்பு, ஜூன். 16

நாட்டின் தற்போதைய பிரச்னைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டுமாயின் ஆட்சி மாற்றம் மிகவும் அவசியமானது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலவரம் தொடர்பில்

15

# பொருளாதார கட்டமைப்பை வலுவாக்க பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துங்கள்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 16

பொருளாதாரக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கு அரசியலமைப்பின் ஊடாக பாதுகாப்பு மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதே அடிப்படையாக இருக்கும் என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப்பிராந்தியப் பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் பாராளுமன்றில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நாடு எதிர்நோக்கியுள்ள பாரிய பொருளாதார நெருக்கடியிலிருந்து பாதிக்கப்பட்ட மக்களை எவ்வாறு பாதுகாப்பது என்பது குறித்து விளக்கமளித்திருந்தார்.

சர்வதேச

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

கடந்த திங்களன்று 'ஈழநாடு' வாசகர் ஒருவரிடமிருந்து ஒரு மின் அஞ்சல் வந்திருந்தது. தன்னிடம் தமிழில் எழுதுவதற்கான எழுத்துருக்கள் இல்லை என்றும், அதனால் ஆங்கிலத்தில் எழுதுவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அன்பர், கூகுளில் தேடினால் இலவசமாகவே தமிழ் எழுத்துருக்களை பெறலாம் என்பது தெரியாதவராக இருக்கலாம். அண்மையில், 'பனங்காட்டான்' எழுதிய கட்டுரை குறித்து நேற்றைய தினமும் இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன். அந்த வாசகரும் அதுபற்றித்தான் தனது கருத்தை எழுதியிருந்தார்.

'பனங்காட்டான் யாராக இருந்தாலும் சரி, இப்போது தேர்தலுக்கு அழைப்பு விடுத்ததன் மூலம், சுமந்திரன் பசிலின் நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றுகிறார் என்று தவறாக தலைப்பிட்டு, பிழையான கட்டுரை எழுதியுள்ளார்' என்றும், முன்னிலை சோசலிசக்கட்சி, ஜே. வி. பி., ஐக்கிய மக்கள் சக்தி ஆகியவற்றுடன் 'அரகலயா' இளைஞர்களும் புதிய தேர்தலுக்காக போராடுகிறார்கள் என்பது அவருக்குத் தெரியாதா?' என்றும் கேள்வி எழுப்பியிருந்த அந்த வாசகர், பாராளுமன்றத்தில் பொதுஜன பெரமுனவுக்கு உள்ள மிருகத்தனமான பெரும்பான்மை காரணமாக, நியாயமான சீர்திருத்தங்களை கொண்டுவருவது கடினம் என்பது அவருக்கு புரியவில்லையா? என்றும் கேள்வி எழுப்பியிருந்தார்.

பாராளுமன்றத்தை இப்போது கலைப்பதெனில் அது ஜனாதிபதியாலும் முடியாத காரியம் என்பதும், அதனைச் செய்யக்கூடிய ஒரே அதிகாரம் பாராளுமன்றத்திடமே இருக்கின்றது என்பதும் எனக்கோ அல்லது அந்த வாசகருக்கோ தெரிந்திருக்கா விட்டாலும், சுமந்திரனுக்கு நிச்சயம் தெரியும். அந்த வாசகரே சொல்லுவதுபோல, பெரமுனவுக்கு மிருகத்தனமான பலம் பாராளுமன்றில் இருக்கும்போது, அதனை கலைக்க வேண்டும் என்று பசில் கேட்டதும், சுமந்திரன் என்ன செய்திருக்கவேண்டும்? பசிலிடமில்லவா சவால்விடுத்திருக்கவேண்டும், பாராளுமன்றைக் கலைக்க நீங்கள் தயாரா என்று? அதைவிடுத்து, அவரும் பசில் பாணியிலேயே பாராளுமன்றைக் கலையுங்கள் என்று கோரிக்கை விடுப்பது எதற்காக? அதனைத்தான் பனங்காட்டானும் கேள்விக்கு உட்படுத்தியிருப்பார் என்று நினைக்கின்றேன்.

அதுமாத்திரமன்றி, தனது அந்தக் கடிதத்தை துணிவிருந்தால் உங்கள் பத்திரிகையில் பிரசுரியுங்கள் பார்க்கலாம் என்று வேறு அவர் சவால் விடுக்கிறார். அது பொதுவெளியில் பிரசுரிக்கக்கூடிய வார்த்தைகளுடன் இருந்திருந்தால் நிச்சயம் அதனை பிரசுரிக்க 'ஈழநாடு' தயங்கியிருக்காது. கூட்டமைப்பு எம். பி.க்களை மாத்திரமன்றி, ஒட்டுமொத்த தமிழ் தேசிய எம். பி.க்களையும் மிக கேவலமான வார்த்தைகளால் விளித்து, அவர் எழுதிய அந்தக் கடிதம், கூட்டமைப்புக்கு வாக்களித்த பல லட்சம் மக்களையுமே கேவலப்படுத்துகின்றது என்பதை அவர் முதலில் புரிந்துகொள்ளவேண்டும்.

'இந்த எம். பி.க்கள் எவரும் துன்பப்படும் விதவைகள், வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்கள், தங்கள் வாக்காளர்கள் ஆகியோருக்கு ஆதரவளிப்பதுமில்லை, சுற்றுச்சூழல் மேம்பாட்டுத் திட்டங்களில் கவனம் செலுத்துவதும் இல்லை. குறைந்தபட்சம், சுமந்திரன் சட்டப் போராட்டங்களில் ஈடுபடுகிறார், அரசியலமைப்பு விவகாரங்களில் பணியாற்றுகிறார். நாடு எதிர்கொள்ளும் பொதுவான பிரச்னைகளைப் பற்றி பேசும் திறன் அவருக்கும் சாணக்கியனுக்கும் மட்டுமே உண்டு.' இப்படி செல்கின்றது அவரது கடிதம்.

இந்தக் கடிதம் வந்த மறுதினம் லண்டன் நண்பர் சச்சிதானந்தம் அவர்களிடமிருந்து ஓர் ஒலிப்பதிவு கிடைத்தது. லண்டனில் வசிக்கும் அசிரியர் ராஜன் வினாசித்தம்பி, தானே பேசி ஒலிப்பதிவுசெய்து அனுப்பிய குறுந்தகவல் அது. இந்த ராஜன், லண்டனில் வாழ்ந்தாலும் தாயகத்தின் கல்வி மேம்பாட்டுக்காகவும் மக்களின் சமூக மேம்பாட்டுக்காகவும் தொடர்ந்து உழைத்துக் கொண்டிருப்பவர். அவரது செய்தியின், முதல் இரு வசனங்களையும் மாத்திரம் தருகின்றேன்.

'வணக்கம். சுமந்திரனதும் சாணக்கியனதும் வீடியோக்களை அவர்கள் அனுப்பிக் கொண்டிருக்கினம். சமூக வலைத்தளங்களில் தமது ஆட்களை வைத்து அவர்கள் இவ்வாறு அனுப்புவதாக தெரிகின்றது. அவர்கள் இருவரினதும் பாராளுமன்ற பேச்சுக்களைப் பார்த்தால், அவர்கள் இருவரும் ஒரு தேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் போலவே பேசுகிறார்கள். சுமந்திரன் சொல்கிறார், நாட்டில் ஜனநாயகம் இல்லையாம். அவரை தமிழ் மக்கள் தெரிவுசெய்து அனுப்பியது தமிழ் மக்களின் பிரச்னைகளை கதைக்கச் சொல்லியே' என்று செல்கின்றது ராஜன் வினாசித்தம்பியின் குரல். அதில் அவர் கேட்கும் கேள்விகளுக்கு இந்த ஊர்க்குருவியிடம் பதில் இல்லை. அதையேதான் எமக்கு மின்அஞ்சல் அனுப்பியவரும், 'நாடு எதிர்கொள்ளும் பொதுவான பிரச்னைகளைப் பற்றி பேசும் திறன் அவருக்கும் சாணக்கியனுக்கும் மட்டுமே உண்டு' என்று தெரிவித்திருக்கின்றார்.

மற்றையை எம். பி.க்கள் தமிழர்களின் பிரச்னை பற்றி பேசும் போது, அது தேவையற்ற விடயம் என்று கூறுகின்ற ஒருவரிடமிருந்து இதைத்தானே நாமும் எதிர்பார்க்கலாம்!

- ஊர்க்குருவி

# மண்ணெண்ணெய் தட்டுப்பாடு மன்னாரில் மீனவர்கள் பாதிப்பு

## கடல் உணவுகளின் விலையும் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 16

**நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக தொடர்ந்து பொருட்களின் விலை அதிகரித்து வருகின்றது. இந்த நிலையில் மண்ணெண்ணெய் இன்மையால் மன்னாரில் மீன்பிடி தொழில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மீன்களின் விலைகள் அதிகரித்துள்ளது.**

மீன்பிடி நடவடிக்கைக்கு என மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மண்ணெண்ணெய் விநியோகிக்கப் படுவதால் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் மீனவர்களின் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளது.

அதே நேரம் எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாகவும் சந்தையில் மீன் விலை அதிகரித்துள்ளது. இதனால் மீனவர்கள் உட்பட மீன் சந்தையில் மீன் வியாபாரத்தில் ஈடுபடும் மீன் வியாபாரிகள் பாதிப்படைந்துள்ளனர்.



மேலும் அண்மைய நாட்களாக மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடாமையால் மீன் சந்தையில் மீன்களின் வருகையும் குறைந்துள்ளது.

இதன் காரணமாக மீன் விலையும் அதிகரித்துள்ளது. மீன் விலை அதிகரித்துள்ளமையினால் மீன்களை கொள்வனவு செய்யும் மக்களின் எண்ணிக்கையும் குறைந்துள்ளதாக மீன் வியாபாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

மீன்பிடி இன்மை மற்றும் மீன் வியாபாரம் தொடர்ச்சியாக குறைந்துள்ள மையினால் மீன் சந்தைகளை குத்தகை ரீதியாக பெற்று நடத்தும் குத்தகை தாரர்கள் வருமானம் இன்றி பாதிப்படைந்துள்ளனர்.

எனவே விரைவில் மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் போதிய அளவில் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாட்டை மேற்கொண்டு தருமாறு மீனவர்கள் மற்றும் மீன் வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

## மின்சார திருத்த சட்டமூலத்தில் கைச்சாத்திட்டார் சபாநாயகர்!

கொழும்பு, ஜூன் 16

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இலங்கை மின்சார திருத்தச் சட்டமூலத்தில் கைச்சாத்திட்டு சான்றுரைப் படுத்தினார்.

2009ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தைத் திருத்துவதற்கான இலங்கை மின்சார திருத்தச் சட்டமூலத்தில் நேற்று தனது கையொப்பத்தையிட்டு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சான்றுரைப்படுத்தினார்.

இந்தச் சட்டமூலம் அண்மையில் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. மின்சாரப் பிறப்பாக்கத்திற்கு விலைகோரும் நடைமுறை யொன்றில் பங்கு பற்றுவதற்கு எவரேனுமாள் இதன் மூலம் அனுமதிக்கப்படுவர். இதற்கமைய நேற்று முதல் இலங்கை மின்சார திருத்தச் சட்டம் 2022 ஆம் ஆண்டு 16ஆம் இலக்கச் சட்டமாக இலங்கைச் சட்டக் கட்டமைப்பில் இணைந்துகொள்கிறது. (அ)

## திருமுறை விண்ணப்பம்!

யாழ்ப்பாணம், ஜூன் 08

அச்சுவேலி உலவிக்குளம் சித்திவிநாயகர் ஆலயம், சிவ காமஞானபானு சிவஸ்ரீ ச. குமாரசுவாமி குருக்கள் அறக் கட்டளை, பிரித்தானிய சைவ முன்னேற்ற சங்கம், இந்தியா - சேலம் பன்னிரு திருமுறைகள் பகுப்பாய்வு மையம் என்பன இணைந்து நடத்தும் சிவநெறிய திருமுறை விண்ணப்பம் இன்று வியாழக்கிழமை மாலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில், சூம் செயலியின் 417 892 9023 என்ற அடையாள எண் மூலம் 202811 என்ற கடவுச் சொல்லைப் பயன்படுத்தி இணைய முடியும். (ஐ)

## மஹியங்கனை ஆற்றில் நீராட சென்ற 16 வயது சிறுவன் நீரில் மூழ்கி மாயம்!

கொழும்பு, ஜூன் 16

மஹியங்கனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மகாவலி ஆற்றுப் பாலத்துக்கு குடும்பத்துடன் நீராடச் சென்ற 16 வயதுச் சிறுவன் ஒருவர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

நேற்று முன் தினம் மாலை இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

க.பொ.த.சாதாரண தர பரீட்சைக்கு தோற்றிய ஹஷான் என்பவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

காணாமல் போன சிறுவனை பொலிசார், கடற்படையினர் மற்றும் பிரதேசவாசிகள் தேடி வருகின்றனர்.

இதேவேளை, சியம்பலாண்டுவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முத்துகண்டிய பிரதேசத்தில் உள்ள கால்வாயில் நீராடச் சென்ற இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த விபத்து நேற்று முன் தினம் மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## மருத்துவர் ஷாபிக்கு சந்திரிகா பாராட்டு!

கொழும்பு, ஜூன் 16

குருநாகல் வைத்திய சாலையின் மருத்துவர் ஷாபி ஷிகாப்தீன் தான் பணி இடைநிறுத்தப்பட்டிருந்த காலத்துக்காக தனக்கு வழங்கப்பட்ட வேதனத்தை அத்தியாவசிய மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு வழங்கியமைக்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாராட்டு தெரிவித்துள்ளார்.

"பொறாமை, வெறுப்புணர்வை போர்த்திக்கொண்ட சிங்கள தீவிரவாதத்தின் வெட்கக் கேடான அத்தியாயம் சிறந்த தொழில்சார் நிபுணரின் வாழ்வை சிதைத்துவிட்டது.

மருத்துவர் ஷாபி மீது உமிழப்பட்ட வெறுப்புக்கு அவர் வழங்கியுள்ள பதிலுக்காக பாராட்டுக்கள். -என்று குறிப்பிட்டுள்ளார். (அ)

## அரச வைத்திய சங்கத்துக்கு புதிய தலைவராக சிறிசேன

கொழும்பு, ஜூன் 16

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்துக்கு புதிய தலைவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அதன்படி, புதிய தலைவராக விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் தர்ஷன சிறிசேன நியமிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற 95ஆவது பொதுச் சபையில் அவருக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் கலாநிதி அனுருத்த பாதெனிய 11 வருடங்கள் அந்தப் பதவியை வகித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு
Eelanadu
16.06.2022 வியாழக்கிழமை
பிலவ வருடம், ஆனி 02

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 730 1370**

# எத்தனை ஆட்சி மாற்றங்கள் வந்தாலும்?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினருமான இராஜவரோதயம் சம்பந்தன் - ஆட்சி மாற்றமொன்றே இப்போது தேவையானது, அதன் மூலம்தான் பிரச்னைகளை தீர்க்க முடியுமென்று கூறியிருக்கின்றார். சம்பந்தன் எதனைப் பற்றி பேசுகின்றார்? தமிழ் மக்களின் தீர்க்கப்படாத பிரச்னைகளை பற்றி பேசுகின்றாரா அல்லது நாடு தற்போது எதிர்கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடிக்கான தீர்வு பற்றி பேசுகின்றாரா?

நாடு தற்போது எதிர்கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்கான தீர்வு தொடர்பில் சிந்தித்தால், ஆட்சி மாற்றமொன்று நிச்சயம் தீர்வாகலாம். ஆனால், அதில்கூட சிக்கல்கள் இருக்கின்றன. எனினும், ஒரு ஸ்திரமான அரசாங்கத்தின் தேவைப்பாட்டை கருத்தில் கொண்டால், ஒப்பீட்டு அடிப்படையில், ஆட்சி மாற்றமொன்று சில விடயங்களை முன்னெடுப்பதற்கான சாதகமான சூழலை ஏற்படுத்தலாம். ஆனால், அது தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை மட்டும் கருத்தில் கொண்டு சிந்திப்பதாயின், ஆட்சி மாற்றம் விமோசனத்தைத் தருமென்று கூறுவதில் சிக்கல்கள் உண்டு. ஏனெனில் 2015இல் இடம்பெற்ற ஆட்சிமாற்றம், தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்யவில்லை. இத்தனைக்கும் கூட்டமைப்பிற்கும் மைத்திரி-ரணில் அரசாங்கத்திற்குமிடையில் மிகவும் நெருக்கமான உறவிருந்த போதிலும் கூட, எதிர்பார்த்த விடயங்களை கூட்டமைப்பினால் வெற்றிகொள்ள முடியவில்லை. ஏன்?

2015 ஆட்சி மாற்ற அனுபவங்களிலிருந்து சிந்திப்போமானால், எத்தனை ஆட்சி மாற்றங்கள் வந்தாலும், தமிழ் மக்களின் விடயங்களில் பெரியளவில் முன்னேற்றங்கள் ஏற்படப்போவதில்லை. ஏன்?

மேற்குறிப்பிட்ட இரண்டு கேள்விகளுக்குமான பதில் ஒன்றுதான் - அதவாது, ஆட்சி மாறங்களானது, தென்னிலங்கையின் அரசியல் போக்கில் ஏற்படும் அரசியல் நெருக்கடிகளின் விளைவாக ஏற்படுகின்றதேயன்றி, தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கான தீர்வை இலக்கு வைத்து எந்தவோர் ஆட்சி மாற்றமும் ஏற்படுவதில்லை. அவ்வாறு நிகழவும் மாட்டாது. ஏனெனில், இலங்கையில் இடம்பெறும் எந்தவோர் அரசியல் மாற்றமும் அல்லது அரசியல் நெருக்கடியும் சிங்கள பெரும்பான்மையை பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சிகளுக்கிடையில் ஏற்படும் முரண்பாடுகள் மற்றும் பிளவுகளின் அடிப்படையிலேயே இடம்பெறுகின்றது.

தமிழ் மக்கள் இதில் ஒரு விடயமல்ல. ஆனால், ஆட்சி மாற்றம் ஒன்றுக்கு தமிழ் மக்களின் வாக்குகள் முக்கியமானவை எனும்போதுதான், தமிழ் அரசியல் கட்சிகள் கருத்தில் கொள்ளப்படுகின்றன. இதனை சரியாக விளங்கிக்கொண்டால் மட்டுமே, ஆட்சி மாற்றங்களை தமிழ்த் தேசிய தரப்புக்கள், தமிழ் மக்களின் நலனிலிருந்து கையாள முடியும்.

2015 ஆட்சி மாற்றத்தை விளங்கிக் கொள்வதில் சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பு தவறியது. இதன் விளைவாகவே, அரசாங்கத்தோடு தேனிலவில் திளைத்தபோதிலும்கூட, மக்களின் நலனை முன்னிறுத்தி எதனையும் கூட்டமைப்பால் செய்ய முடியவில்லை. சம்பந்தன், ஆட்சி மாற்றத்தை சரியாக விளங்கிக் கொண்டிருந்தால், புதிய அரசியல் யாப்பு பற்றி பேசியிருக்கமாட்டார். வரமுடியாத அரசியல் யாப்பு ஒன்றுக்காக, காலத்தை வீணாக்கியிருக்கமாட்டார். 2015இல், சம்பந்தனுக்கு கிடைத்த சந்தர்ப்பம் பொன்னானது.

ஏனெனில், ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தில், 13ஆவது திருத்தச் சட்டத்தை வலுவாக்குவதற்கான வாய்ப்புக்கள் மிகவும் பிரகாசமாகவே இருந்தது. இந்த விடயத்தில், இந்தியாவின் உதவியை பூரணமாக பெறுவதற்கான வாய்ப்புக்கள் இருந்தன. ஆனால், சம்பந்தனோ, தனக்கு எவரும் புத்திமதி கூறவேண்டியதில்லை என்னும் இறுமாப்பில் செயல்பட்டு, வாய்ப்புக்களை விரயம் செய்தார். இறுதியில் அரசியல் யாப்பும் வரவில்லை, இருக்கின்ற அரசியல் யாப்பில், மாகாண சபையை வலுவாக்கும் நோக்கில் மேற்கொள்ளக்கூடிய விடயங்களும் இடம்பெறவில்லை. இறுதியில் தமிழ் மக்களின் ஆதரவுடன் கொண்டுவரப்பட்ட ஆட்சி மாற்றம், தமிழ் மக்களுக்கு பிரயோசனமில்லாமல் போனது.

இப்போது, மீண்டும் ஆட்சி மாற்றம் தொடர்பில் சம்பந்தன் பேசுகின்றார். ஆட்சி மாற்றமொன்றை நோக்கித்தான் நாடு நகர்கின்றது. ஆனால், அந்த ஆட்சி மாற்றத்திலும் தமிழ் மக்களின் விடயங்கள் பிரதானமானதாக இருக்கப் போவதில்லை. ஆட்சி மாற்றங்களை பயன்படுத்திக் கொள்ளும் வல்லமை, தமிழர் தலைமைகளுக்கு அல்லது தலைமைகளென்று தங்களை கூறிக்கொள்வோருக்கு இருந்தால் மட்டும்தான், இடம்பெறும் மாற்றங்களை, தமிழ் மக்களும் சாதகமாக பயன்படுத்திக்கொள்ள முடியும். இல்லாவிட்டால் மாற்றங்கள் நிகழும் - ஆனால், தமிழ் மக்களின் பிரச்னைகள் மட்டும், வழமைபோல் போல், வெறுமனே மேடைகளில் மட்டுமே ஒலித்துக்கொண்டிருக்கும்.

# இலங்கையை யாசிக்கும் நிலைக்கு கொண்டுவந்ததே 'ஆசியாவின் அதிசயம்'

## பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்



**அலசுவது இராஜதந்திரி**

"இலங்கையை ஆசியாவின் அதிசயமாக்குவோம் என்றனர். ஆனால், முழுநாட்டையும் யாசிக்கும் நிலைக்குக் கொண்டு வந்ததே ஆட்சியாளர்கள் புரிந்த அதிசயமாகும்". இவ்வாறு இலங்கையின் கத்தோலிக்க பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை வரலாறு காணாத வகையில் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. நாட்டில் திரும்புமிடமெல்லாம் எரிபொருளுக்காகவும், சமையல் எரிவாயுவுக்காகவும் மக்கள் நீண்ட வரிசைகளில் கால்கடுக்க நிற்பதையே அவதானிக்க முடிகின்றது.

இலங்கையில் மிக மோசமான முறையில் ஒரு 'மோசடித்தனமான' குடும்பம் ஆட்சியிலிருந்து நாட்டின் திறைசேரியை மனம்போன போக்கில் ஏப்பம் விட்டுள்ளதென்பதே மக்களின் குற்றச்சாட்டாக இருக்கின்றது.

இன்றைய நாட்டு நிலவரம் குறித்து தம்மால் மக்களின் கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாதென்பதை அறிந்தே ஐக்கிய தேசிய கட்சியிலிருந்த ரணில் விக்கிரமசிங்கவையும் தமது பக்கம் சேர்த்து எதிர்த்தரப்பிலிருந்து வரக்கூடிய சவால்களை முறியடிக்கும் நடவடிக்கையை அரச தரப்பு மேற்கொண்டுள்ளது.

பிரதமராக ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கீழ் பதவி வகிப்பதன் மூலம் இலங்கையில் ஜனநாயக நடைமுறைகளுக்கும் அவர் வேட்டு வைத்துள்ளதையே அவதானிக்க முடிகின்றது. ஒரு ஜனநாயக நாட்டில் "கீரைக் கடைக்கு எதிர்க் கடை"யாகவே எதிர்க்கட்சி விளங்குகின்றது. ஆனால், ஒரு காத்திரமான எதிர்க்கட்சியாக இருக்கத் தவறியதோடு தற்போது கவிழ்ந்து விழும் நிலையில் இருக்கின்ற அரசுக்கு தோள் கொடுக்கும் வேலையையே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புரிந்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் "தவளைப் பாய்ச்சல்" நடவடிக்கையானது நாட்டு மக்களுக்கு இழைத்த அநீதியாகவே இருக்கின்றது. அத்துடன், ஒரு காத்திரமான ஜனநாயக எதிர்ப்பலையை உருவாக்கி தற்போதைய அரசை வெற்றி கொள்ள முடியாது தாம் இருப்பதையும் ரணில் விக்கிரமசிங்க நிரூபித்துள்ளார்.

எனவே, ஒரு தோல்வியுற்ற அரசையும் அதன் தோல்விக்கான காரணங்களையும் மக்கள் முன்வைத்து ஓர் ஆட்சி மாற்றத்துக்கு வழியமைக்க முடியாத பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தற்போது ஆட்சியாளரின் அடிவருடியாக மாறியிருப்பதுவே "ஆசியாவின் அதிசயமாக" இருக்கின்றதே தவிர, நாட்டின் பொருளாதாரம் எவ்வகையிலும் 'ஆசியாவின் அதிசயமாக' மாறிவிடவில்லை.

இலங்கையின் பொருளாதாரம் தற்போது "கப்பல் பார்த்த கதை"யாக மாறியுள்ள நிலையில் இலங்கைக்கு எரிபொருளை வாங்குவதற்கு மட்டுமல்ல. எரிபொருளைக் கொண்டுவந்து இறக்குவதற்கு துறைமுகத்தில் தங்கி நிற்பதற்கான கட்டணமாகவும் கோடிக் கணக்கான டொலர்களில் இலங்கை, பணத்தை செலுத்த வேண்டிய நிர்பந்தத்துக்கு உள்ளாகியுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒரு தோல்வியுற்ற அரசை மாற்றம் காண வைத்து தமது ஆளுமையை ஒரு வெற்றி பெற்ற அரசை உருவாக்குவதில் செலுத்துவதைவிட தனது தலையில் தானே மண்ணை வாரிக் கொட்டிய நிலையில் காணப்படுகின்றார்.

இத்தகைய பின்னணியில் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தல் மற்றும் ஜனாதிபதி தேர்தல் என்பவற்றில் எத்தகைய முகத்தோடு எக்கட்சி சார்பாக ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவார் என்பதுகூட கேள்விக்குரியதாகவே இருக்கின்றது.

இதுதவிர, தேர்தல் பிரசாரத்துக்காக ரணில் விக்கிரமசிங்கவோ அல்லது அவர் சார்ந்துள்ள சிறீ லங்கா பொதுஜன பெரமுனவினரோ இவை யாவற்றுக்கும் மேலாக காலாகாலமாக இலங்கையின் முக்கிய தேசிய கட்சியாக விளங்கிய ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய கட்சியோ எதிர்காலத்தில் தேர்தல் அரங்கில் எவ்வாறான வியூகங்களை அமைக்க முடியும் என்பதுகூட முக்கிய கேள்வியாக இருக்கின்றது.

எனவே, நாட்டில் அற்பத்தனமான முறையில் ஜனநாயக விழுமியங்களை புறந்தள்ளியுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் ஆளும் தரப்பில் இருந்தால்கூட நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியாதென்பதே யதார்த்தமாகும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இரு தினங்களுக்கு முன்னர் நாட்டின் தற்போதைய மிக அத்தியாவசிய தேவையான சமையல் எரிவாயு குறித்து கருத்து வெளியிட்டபோது எரிவாயு விநியோகத்துக்கான முன்னுரிமை பற்றி குறிப்பிட்டிருந்தார். அப்போது அவர் உணவகங்கள், வைத்தியசாலைகள் என்பவற்றுக்கு முன்னுரிமை அளித்து எரிவாயு விநியோகம் மேற்கொள்ளப்படும் என்று கூறியிருந்தார்.

அவர் குறிப்பிட்ட முன்னுரிமைக்கு உரியவற்றில் இறந்தோருடைய சடலங்களை தகனம் செய்வதற்கான எரிவாயுக்கூடங்களும் இடம்பெறும் என்று கூறியுள்ளதை அறியும்போது நாட்டில் பட்டினி மரணங்கள் குறித்து ரணில் விக்கிரமசிங்க முன்கூட்டியே தெரிவித்துள்ளாரோ என்றே கருத வேண்டியுள்ளது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**

இரண்டு நாட்களாக இழுபறியாக இருந்த வேலை இன்று நிறைவேறும். குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்னைகள் விலகும். கேட்ட இடத்தில் இருந்து உதவி கிடைக்கும்.

**இடபம்**

எதிர்பாராத பிரச்னைகள் தோன்றும். மனதில் தேவையற்ற சங்கடம் உண்டாகும். புதிய முயற்சிகள் இன்று கை கொடுக்காமல் போகும். உங்கள் திறமைக்கு சவாலான நாள்.

**மிதுனம்**

தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு உங்கள் செயலில் முன்னேற்றம் காண்பீர்கள். வியாபாரத்தில் ரகசியம் புலப்படும். லாபத்திற்குரிய வழியை காண்பீர்கள். வாழ்க்கைத்துணையால் லாபம் உண்டாகும்.

**கடகம்**

பணம் தொடர்பாக ஏற்பட்ட தடை விலகும். அரசு வழியிலான நன்மை உண்டாகும்.பணியிடத்தில் உங்கள் செயல்களுக்கு வரவேற்பு உண்டாகும். எதிர்பாராத வரவு வரும்.

**சிம்மம்**

தொழிலில் எதிர்பார்த்த லாபம் ஏற்படும். புதிய தொடர்புகளால் முன்னேற்றம் ஏற்படும். குடும்ப நிலையை உயர்த்த முயற்சிப்பீர்கள். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். குடும்ப சொத்தில் இருந்த பிரச்னை தீரும்.

**கன்னி**

தாய்வழி உறவுகளால் லாபம் அடைவீர்கள். பெரியவர்கள் சந்திப்பால் நன்மை ஏற்படும். சுபச்செய்தி வீடு தேடி வரும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் பணியிடத்தில் வெற்றி உண்டாகும்.

**துலாம்**

குடும்பத்தினர் நலனில் அக்கறை கொள்வீர்கள். உங்கள் உயர்ந்த எண்ணம் இன்று நிறைவேறும். வியாபாரத்தை விருத்தி செய்வீர்கள். நிதிநிலையை உயர்த்துவீர்கள்.

**விருட்சிகம்**

உங்களை விட்டு விலகிச் சென்ற உறவினர்கள் மீண்டும் உங்களைத் தேடி வருவார்கள். கணவன் மனைவிக்குள் ஏற்பட்ட பிரச்னை மறையும். மகிழ்ச்சியான நாள். தடைபட்டிருந்த செயல் முடிவிற்கு வரும்.

**தனுசு**

உங்கள் பிரச்னையை மற்றவர்களிடம் கொண்டு செல்ல வேண்டாம். கடவுள் அருளால் நன்மை உண்டாகும். உங்களை சீண்டிப் பார்க்க சிலர் முயற்சிப்பார்கள். அமைதியை இழக்காதீர்கள்.

**மகரம்**

செலவுகளால் உங்கள் இருப்பு கரைக்கும். பரபரப்பான நாள். உங்கள் வரவை விட செலவு அதிகரிக்கும். கடன் கொடுத்தவர் நெருக்கடியை ஏற்படுத்துவர்.

**கும்பம்**

இன்று மற்றவர்களின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். லாபகரமான நாள். புதிய தொழில் தொடங்கும் முயற்சி நிறைவேறும். நண்பர்கள் உதவி செய்வார்கள்.

**மீனம்**

வியாபாரத்தில் உங்கள் அணுகுமுறையால் லாபம் அதிகரிக்கும்.மகிழ்ச்சியான நாள். உங்களுடைய நீண்ட நாள் எண்ணம் ஒன்று நண்பர்களால் இன்று நிறைவேறும். சுப நிகழ்ச்சிகளை முன நின்று நடத்துவீர்கள்.

# ஈழத் தமிழரின் உரிமைகளை தமிழக அரசு மீட்க வேண்டும்!

சென்னை, ஜூன் 16

“இலங்கையில் தமிழர் வாழும் பகுதிகளில் தொடர்ந்து பௌத்த விகாரைகள் கட்டப்பட்டு வரும் நிலையில், தமிழர் உரிமைகளை மீட்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்” என தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் பண்ருட்டி வேல்முருகன் கேட்டுள்ளார்.



இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“2009ஆம் ஆண்டு, இலங்கையில் போர் முடிவுக்கு பிறகு, பௌத்தர்களின் ஆக்கிரமிப்புகளும், அதிகாரமும் தலைதூக்கத் தொடங்கியது. ஈழத்தில் தமிழர் நிலங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, அங்கு சிங்களவர்களும், சிங்கள இராணுவமும் குடியமர்த்தப்பட்டன. தமிழர்களின் வழிபாட்டுத் தலங்கள், புத்த விகாரைகளாக மாறின.

குறிப்பாக, தமிழர்களின் வழிபாட்டிடமான செம்மலை நீராவியடிப் பிள்ளையார் இன்று பௌத்தர்களின் விகாரைகளாக வேரூன்றியிருக்கின்றது. நெடுங்கேணி வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் வழிபாட்டு உரிமைகள் மறுக்கப்பட்டு, இன்று பௌத்தர்களின் இராச்சியமானது. இப்போது குருந்தூர்மலையிலும் அதே நிலை ஏற்பட்டிருக்கின்றது.

ஈழத்தில், தமிழர்களின் பாரம்பரிய உரிமைகள் மறுக்கப்படும் சூழலில், குருந்தூர்மலையில் சிங்கள, பௌத்த அடையாள சின்னங்களை நிறுவி, தமிழர் பகுதிகளை ஆக்கிரமிக்கும் முயற்சி தொடக்கப்பட்டிருக்கின்றது. புத்தர் சிலை வைக்கப்பட்டு வழிபாடு நடத்தப்படும் கட்டுமானப் பொருட்களும் இன்று குவிக்கப்பட்டிருக்கின்றன. முக்கியமாக, தற்போது குருந்தூர்மலையில் அமைக்கப்பட்டிருந்த சிவன், ஐயனாரின் சூலம் உடைக்கப்பட்டதோடு, வழிபாட்டு எச்சங்களும் அழிக்கப்பட்டுள்ளன.

குருந்தூர்மலை தமிழர்களின் பூர்விக பகுதியே. அதில் உள்ள தெய்வங்களை அக்கிராம மக்கள் பூர்விகமாக வழிபட்டு வந்திருக்கின்றார்கள். இதற்கு அங்குள்ள எச்சங்களும், சிதைவுகளும் வரலாற்று ரீதியாக பறைசாற்றுகின்றன. இங்கு கண்டுபிடிக்கப்பட்ட எச்சங்கள் 2300 ஆண்டு காலம் பழமை வாய்ந்தது என ஆய்வாளர்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆனாலும், இம்மலையில் இருக்கும் சிதைவுகளும், எச்சங்களும் பௌத்தர்களுடையது என போலியான ஆதாரங்களை சித்தரித்ததோடு, வட, கிழக்கில் காணப்படும் மலைகள், பௌத்த விகாரைகளை அடிப்படையாக கொண்டது என்று சிங்கள பேரினவாத அரசு கட்டுக்கதைகளை கட்டவிழ்த்து வருகிறது. பன்முகத்தன்மை வாய்ந்த இந்தியாவை, இந்துத்துவா என்ற ஒற்றை மதத்தின் பெயரால் நிறுவ மோடி அரசு எப்படி முயல்கிறதோ, அதே போன்று, இலங்கையில் தமிழர் வாழும் பகுதிகளிலும் பௌத்தம் என்ற ஒற்றை மதத்தை நிறுவ சிங்கள பேரினவாத அரசு செயல்பட்டு வருகிறது.

இலங்கையில் உள்ள தமிழர் பகுதிகளில் முருகன், சிவன், ஐயனார் கோயில்களை சிங்களப் பேரினவாத அரசிடம் இருந்து காக்க, அங்குள்ள தமிழர்கள் குரல் எழுப்பியும், போராடி வருகின்றனர். அவர்களுக்கு ஆதரவாக குரல் கொடுக்க வேண்டியது தமிழக தமிழர்களின் கடமை.

எனவே, மிக தொன்மையான வரலாற்றை கொண்ட முல்லைத்தீவு - குருந்தூர் மலையில் உள்ள ஆதிசிவன், முருகன், ஐயனார் கோயிலை காக்க, தமிழகத்தில் உள்ள தமிழர்கள் குரல் கொடுக்க வேண்டும். இதில், கடவுளை ஏற்போரும் இருக்கலாம், கடவுளை மறுப்போரும் இருக்கலாம்.

இது தொடர்பாக, தமிழக அரசும், ஒன்றிய அரசின் துணையோடு, இலங்கையில் உள்ள தமிழர்களின் வழிபாட்டு தலங்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சி கேட்டுக் கொள்கிறது” என்று தெரிவித்துள்ளார். (ஐ)

# அ. தி. மு. கவில் வலுக்கிறது ஒற்றை தலைமை கோரிக்கை!

## ஓ. பி. எஸ்., இ. பி. எஸ். அணி மோதல் உச்சம்

சென்னை, ஜூன் 16

அ. தி. மு. கவில் ஒற்றைத் தலைமை விவகாரம் தொடர்பாக, அந்தக் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் ஓ. பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் தனித்தனியாக ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

ஓ. பன்னீர்செல்வம் தனது ஆதரவாளர்களுடன் நேற்று முன்தினம் இரவு ஆலோசனை நடத்தினார். இதனைத் தொடர்ந்து 2ஆவது நாளாக அவர் தனது ஆதரவாளர்களுடன் நேற்றும் ஆலோசனை நடத்தி வருகிறார். இதேபோல் எடப்பாடி பழனிசாமியும் தனது வீட்டில் ஆலோசனை நடத்தி வருகிறார். இதனால், அ. தி. மு. கவில் மீண்டும் ஒற்றைத் தலைமை விவகாரம் சூடுபிடித்துள்ளது.

முன்னதாக, 2019இல் நடைபெற வேண்டிய அ. தி. மு. க. அமைப்பு தேர்தல் கொரோனாவால் தள்ளிப் போனது. இதையடுத்து, கடந்த ஆண்டு டிசெம்பரில் பதவி வாரியாக தேர்தல் அறிவிக்கப்பட்டு, ஒருங்கிணைப்பாளராக ஓ. பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளராக பழனிசாமி மற்றும் படிப்படியாக மாவட்டச் செயலர்கள், நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

இந்நிலையில் வரும் 23ஆம் திகதி பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது இந்நிலையிலேயே பன்னீர்செல்வமும் பழனிசாமியும் தனித் தனியே ஆலோசனை நடத்துகின்றனர். அத்துடன், இந்த விவகாரம் கட்சியில் இரு அணிகளை மீண்டும் உச்சமடைய வைத்துள்ளது.

(ஐ)

# இலங்கையிலிருந்து கடத்தி வரப்பட்ட ஒன்றேகால் கிலோ தங்கம் பறிமுதல்!

சென்னை, ஜூன் 16

இலங்கையில் இருந்து கடத்தி வரப்பட்ட ஒன்றே கால் கிலோ தங்கத்தை சென்னை விமான நிலைய சுங்க அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

ஆலந்தூர், சென்னை மீனம்பாக்கம் சர்வதேச விமான நிலையத்திற்கு வரும் விமானங்களில் அதிகளவு தங்கம் கடத்தி வரப்படுவதாக விமான நிலைய சுங்க பணிப்பாளர் உதய் பாஸ்கருக்கு தகவல் கிடைத்தது.

அவரது உத்தரவின்பேரில் சுங்க அதிகாரிகள் இலங்கையில் இருந்து வந்த விமான பயணிகளை தீவிரமாக கண்காணித்தனர். அப்போது இலங்கையை சேர்ந்த விமலாராணி (வயது 30), ஜூவானி (28) உள்பட 3 பெண்களும், தமிழகத்தை சேர்ந்த ஒரு பெண் என 4 பெண்களை சந்தேகத்தின் பேரில் விசாரித்தனர்.

முன்னுக்கு பின் முரணாகப் பேசியதால் அவர்களின் உடைமைகளை சோதனை செய்தனர். அதில் எதுவும் இல்லாததால் தனியறைக்கு அழைத்து சென்று பரிசோதனை செய்தனர். அப்போது உள்ளாடைக்குள் தங்கத்தை மறைத்து வைத்து கடத்தி வந்ததை கண்டு பிடித்தனர்.

4 பேரிடம் இருந்து ரூ.61 லட்சத்து 75 ஆயிரம் இந்திய ரூபாய் மதிப்புள்ள 1 கிலோ 330 கிராம் தங்கத்தை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இது தொடர்பாக 4 பெண்களை கைது செய்துள்ளனர். (ஐ)

# மே 9 வன்முறைகள் குறித்து உரிய விசாரணை வேண்டும்

## ஐ.நா. மனித உரிமைகள் சபையில் வலியுறுத்தல்

**கொழும்பு, ஜூன் 16**

**மே 9 வன்முறைகள் தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் மாநாட்டில் வலியுறுத்தப்பட்டுள்ளது.**

இலங்கை தொடர்பாக அமையப்பெற்ற 7 நாடுகளின் குழு இந்த வலியுறுத்தலை விடுத்துள்ளது.

ஜெனீவாவில் நடைபெறும் மனித உரிமைகள் பேரவையின் 50ஆவது மாநாட்டில் இந்த குழுவின் சார்பாக அறிக்கை ஒன்றை வாசித்த, பிரித்தானியாவின் பிரதிநிதி ரிட்டா ப்ரென்ச், இலங்கை அண்மைக்காலமாக முகம் கொடுத்துள்ள பிரச்சனைகளை அறிந்திருப்பதாக தெரிவித்தார். அத்துடன் நீண்டகாலமாக இலங்கையில் நிலவுகின்ற தண் டனைகளில் இருந்து தப்புகின்ற நிலைமை மற்றும் ஊழல்கள் தொடர்பாகவும் நடவடிக்கை களை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். (அ)

# புலோலி கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் குழுக்களுக்கு தேர்தல்

வடமராட்சி, ஜூன்16

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 13 கிளைகளில் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில் 12 கிளைகளுக்கான கிளைக்குழுக்களும் கிளைக் குழுத்தலைவர்களும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

எஞ்சிய ஒரு கிளைக்கு கிளைக் குழுவைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில் பங்கு கொள்ள எவரும் முன்வராமையினால் அக்கிளைக்கான தேர்தல் எதிர் வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை மண்டபத்தில் பிராந்திய கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகளால் நடத்தப்படவுள்ளது.

இக்கிளைக் குழுத்தேர்தல் முடிவுற்றதும் ஒருமாத காலத்துக்குள் புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு புதிய இயக்குனர் சபை தெரிவு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-02)

# பெரும்போகத்திற்காக 365 000 யூரியா மூடைகளை வழங்க உலக உணவு ,விவசாய அமைப்பு இணக்கம்!

கொழும்பு, ஜூன் 16

குறைந்த வருமானம் பெறும் விவசாய குடும்பங்களுக்கு எதிர் வரும் பெரும்போகத்திற்காக 365, 000 யூரியா பசளை மூடைகளை வழங்க உலக உணவு மற்றும் விவசாய அமைப்பு இணக்கம் வெளியிட்டுள்ளது.

இதன்படி, ஒரு விவசாய குடும்பத்துக்கு தலா ஒரு யூரியா மூடை வழங்கப்படவுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் அடுத்த பெரும் போகத்தின்போது பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குறைந்த வருமானம் பெறும் 14,000 குடும்பங்களுக்கு பாசிப் பயறு செய்கைக்கான நிதியுதவி வழங்க உலக சுகாதார மற்றும் விவசாய அமைப்பு இணக்கம் வெளியிட்டுள்ளது.

இதன்படி, குடும்பம் ஒன்றிற்கு தலா 18, 000 ரூபா வழங்க அந்த அமைப்பு இணக்கம் வெளியிட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# 6 பெண்கள் உட்பட 8 பேர் மருதானையில் கைது!

கொழும்பு, ஜூன் 16

கொழும்பு, மருதானை ஜினானந்த மாவத்தையிலுள்ள வீடொன்றில் நடத்தப்பட்டு வந்த விபசார விடுதியொன்றைச் சுற்றிவளைத்த பொலிஸார், 6 பெண்கள் உட்பட 8 பேரைக் கைது செய்துள்ளனர்.

இங்கு பெண்கள் 2 ஆயிரம் ரூபா முதல் 5 ஆயிரம் ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றனர் எனவும், அங்கு விபசாரத்தில் ஈடுபட்ட 6 பெண்களில் 21 வயதான யுவதி ஒருவரும் அடங்குகின்றார் எனவும் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

வெல்லம்பிட்டி, பசறை, கம்பளை மற்றும் வடுமுல்லை பிரதேசங்களைச் சேர்ந்த பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விபசார விடுதியை நடத்தி வந்தனர் எனக் கூறப்படும் இரு ஆண்கள் லுணுகல மற்றும் கல்கமுவ பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர்.

கைதான 8 பேரையும் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மருதானை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். (அ)



# திருவையாறுப் பகுதியில் அபாய நிலையில் பாலம்!

கிளிநொச்சி, ஜூன் 16

கிளிநொச்சி திருவையாறுப் பகுதியில் உள்ள பாலம் அபாயகரமானதாக மாறியுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இரணைமடு நீர்ப்பாசன வாய்க்கால் பகுதியில் அமைந்துள்ள குறித்த பாலம் அமைக்கப்பட்டு நீண்ட ஆண்டுகள் கடந்துள்ளன. இந்த நிலையில் குறித்த பாலம் நேற்று உடைந்து அபாயகரமான பாலமாக தோற்றம் பெற்றுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் இபாட் திட்டத்தின் கீழ் இரணைமடுக் குளத்தின் அபிவிருத்தி பணியின்போது அப்பகுதியில் உள்ள பாலங்கள் புதிதாக அமைக்கப்பட்டதுடன், குறித்த பாலம் புனருத்தாரணம் செய்யப்பட்டது. ஆயினும் பாலங்களின் பாதுகாப்பான நிலை தொடர்பில் ஆராயப்படாது மேலெழுந்த வகையில் இது புனரமைப்பு செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

குறித்த பாலம் ஆரம்பத்தில் சுண்ணாம்புக் கல்லைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. அது படிப்படியாக சேதமடைய ஆரம்பித்து இன்று போக்குவரத்து செய்வதற்கு அச்ச நிலையை தோற்றுவித்துள்ளது.

குறித்த பாலத்தின் ஊடாக ஆயிரக்கணக்கானோர் பயணம் செய்வதாகவும், கனரக வாகனங்கள் உள்ளிட்டவையும் பயணிப்பதாகவும் பிரதேச மக்கள் தெரிவிப்பதுடன், அபாயகரமான நிலையிலேயே பிரயாணங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் கூறினர்.

திருவையாறுப் பிரதேசத்தையும், வின்சன் வீதியையும் இணைக்கும் இந்த பாலம் இரணைமடுக் குளத்தின் நீர்ப்பாசன வாய்க்காலை கடக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

இரணைமடுக் குளத்திலிருந்து இரண்டாவது முக்கிய பிரயாணப் பாலமாக அமைந்துள்ள இந்தப் பாலத்தைப் புனரமைத்து, அச்சமின்றி பயணிக்கும் சூழலை ஏற்படுத்தித் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# நடுவானில் மோதவிருந்த பயணிகள் விமானங்கள்!

## இலங்கை விமானியின் சாதுரியத்தால் தவிர்க்கப்பட்டது பெரும் விபத்து!

கொழும்பு, ஜூன் 16

லண்டனில் இருந்து கொழும்புக்கு பயணத்தை மேற்கொண்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் யு.எல் 504 என்ற விமானம் நேற்று முன்தினம் பாரிய விபத்திலிருந்து தப்பியமை தொடர்பில் ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த விமானம், 275 பயணிகளுடன் லண்டனிலிருந்து கட்டுநாயக்க நோக்கிப் பயணித்தது.

சுமார் 33,000 அடி உயரத்தில் குறித்த விமானம் பறந்துகொண்டிருந்தபோது, பிரிட்டிஷ் எயார் வேய்ஸூக்கு சொந்தமான விமானம் ஒன்று 35,000 அடி உயரத்தில் பறந்துகொண்டிருந்தது.

துருக்கி வான்வெளியில் பயணித்துக்கொண்டிருந்த சமயத்தில் 33,000 அடியில் இருந்து 35,000 அடி உயரத்துக்கு பயணிக்குமாறு துருக்கி - அங்காரா விமானக் கட்டுப்பாடு அறையில் இருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானிக்கு அறிவுறுத்தப்பட்டது.

விழிப்புடன் இருந்த இலங்கை விமானி, பிரிட்டிஷ் எயார்வேஸ் விமானமொன்று 35,000 அடி உயரத்தில் தமது விமானத்திலிருந்து 15 மைல் தொலைவில் பயணிப்பதை கண்டறிந்து, அங்காராவில் உள்ள விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் வழங்கினார்.

யு.எல் 504 விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் லண்டனின் ஹீத்ரோ விமான நிலையத்திலிருந்து சிங்கப்பூர் நோக்கிச் குறித்த பிரிட்டிஷ் எயார்வேய்ஸ் விமானம் புறப்பட்டிருந்தது.

இந்நிலையில், ஸ்ரீலங்கன் விமானி வழங்கிய தகவலை சரி பார்த்தபோது, அங்காரா விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அறை, யு.எல் விமானியிடம் 35,000 அடி உயரத்தில் எந்த விமானத்தையும் தாங்கள் ராடரில் கண்டறியவில்லை என்று தெரிவித்ததுடன், ஸ்ரீலங்கன் விமானம் மேல் நோக்கிப் பயணிக்கப் பணிக்கப்பட்டது.

எனினும், பிரிட்டிஷ் எயார் வேஸ் விமானத்தை தமது விமானத்தின் ராடரில் கண்டறிந்த ஸ்ரீலங்கன் விமானி, மீண்டும் அங்காரா விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு பிரிவினருக்கு தகவல் கொடுத்தார்.

சில நிமிடங்களுக்குப் பிறகு 35,000 அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்த பிரிட்டிஷ் விமானத்தை ராடரில் கண்டறிந்த கட்டுப்பாட்டுப் பிரிவு, ஸ்ரீலங்கன் விமானத்தை மேலே பயணிக்க வேண்டாம் என்று அவசரமாகப் பணித்தது. ஸ்ரீலங்கன் விமானம் பணிக் கப்பட்ட உயரத்தில் பயணித் திருந்தால், பிரிட்டிஷ் எயார் வேய்ஸ் விமானத்துடன் மோதி பாரிய அசம்பாவிதம் நிகழ்ந்தி ருக்கும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

யு.எல் 504 விமானத்தில் இருந்த 275 பயணிகள், அதன் பணியாளர்கள் மற்றும் பிரிட்டிஷ் எயார்வேஸ் விமானத்தில் இருந்த பயணிகள் மற்றும் அதன் பணியாளர்களின் உயிர்கள், யு.எல் விமானத்தின் தலைமை விமானியின் விழிப்புணர்வு மற்றும் சாதுரியம் காரணமாக காப்பாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பாடசாலைக் கட்டடம் ஒன்றின் மீது மரம் முறிந்து விழுந்து 10 மாணவர்கள் காயம்!

## வெலிமடைப் பகுதியில் நேற்று காலை சம்பவம்

கொழும்பு, ஜூன் 16

வெலிமடை பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றின் கட்டடத்தில் தென்னை மரமொன்று முறிந்து விழுந்ததில் 10 மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

நேற்றுக் காலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த பாடசாலையின் ஆறாம் வகுப்புக் கட்டடத்தின் அருகில் உள்ள காணி ஒன்றில் இருந்த மரம் ஒன்று முறிந்து வீழ்ந்துள்ளது.

இதன்போது காயமடைந்த 10 மாணவர்கள் வெலிமடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டது. (அ)



# அச்சுவேலி கமக்காரர்கள் கையெழுத்து போராட்டம்!

## எரிபொருள் தேவையை வலியுறுத்தி

யாழ்ப்பாணம், ஜூன் 16

அச்சுவேலி பிரதேச கமக்காரர்கள் விவசாயத்திற்கான எரிபொருள் தேவையினை வலியுறுத்தி கையெழுத்துப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

நேற்று புதன்கிழமை காலை அச்சுவேலி சந்தையில் இந்த கையெழுத்துப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த கையெழுத்துக்கள் சேகரிக்கப்பட்டு மாவட்ட செயலாளர் மற்றும் பிரதேச செயலாளர், விவசாயத் திணைக்கள அதிகாரிகளிடம் மகஜர் கையளிக்கப்படவுள்ளது. (அ-03)

# அன்றாட உணவின் அளவை குறைத்த 66 வீத இலங்கையர்!

## உலக உணவுத் திட்ட ஆய்வில் கண்டறிவு

கொழும்பு, ஜூன் 16

**கடும் பொருளாதார நெருக்கடி, உணவுப் பொருட்களில் விலை உயர்வு, உணவுப் பற்றாக்குறை, வருவாய் இழப்பு போன்ற காரணிகளால் இலங்கையர்களில் 66 வீதமானவர்கள் தினசரி உண்ணும் உணவின் எண்ணிக்கையை குறைத்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.**

ஏப்ரல் மாதம் 17 மாவட்டங்களில் உள்ள ஏழ்மையான குடும்பங்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட உணவு பாதுகாப்பு மதிப்பீட்டாய்வின் பிரகாரம் இந்தத் தகவலை உலக உணவுத் திட்டம் வெளியிட்டுள்ளது.

இலங்கையர்கள் 86 வீதம் பேர் மலிவான உணவையும், 95 வீதம் பேர் குறைந்த விலையிலான குறைவான சத்துள்ள உணவை வாங்குவது போன்ற சமாளிப்பு வழிமுறைகளைப் பயன்படுத்துகின்றனர்.

83 வீதம் பேர் உணவின் அளவுகளை கட்டுப்படுத்துகின்றனர். 66 வீதம் பேர் உணவு எண்ணிக்கை அளவைக் குறைத்துள்ளனர். அதாவது 3 நேரம் உண்போர் அதனை 2 வேளையாக குறைத்துள்ளனர்.

இலங்கை 1948 இல் சுதந்திரம் பெற்ற பின்னர் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்கிறது. உணவு மற்றும் எரிபொருளுக்கான தட்டுப்பாடு மற்றும் உணவுப் பொருட்களின் அதியுச்ச விலைகள் ஆகியவற்றுக்கு மத்தியில் தங்கள் அன்றாட உணவு மற்றும் ஊட்டச்சத்து தேவைகளை பூர்த்தி செய்ய மக்கள் போராடுகின்றனர்.

கோவிட் மற்றும் சமீபத்திய பொருளாதார நெருக்கடியால் வேலைவாய்ப்பு மற்றும் வருமானம் பாதிக்கப்பட்டுள்ளது. இது உணவு மற்றும் பிற அத்தியாவசிய பொருட்களை வாங்கும் மக்களின் திறனை நேரடியாக பாதிக்கிறது எனவும் உலக உணவுத் திட்டம் கூறியுள்ளது.

இலங்கையில் உணவுப் பணவீக்கம் 57 சதவீதமாக உள்ளது. உலகளாவிய உணவுப் பொருட்களின் விலை உயர்வு, அந்நியச் செலாவணி கையிருப்பு குறைவு, குறைந்த உள்நாட்டு உணவு உற்பத்தி ஆகியவற்றால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் செப்ரெம்பர் மாதம் வரை இலங்கையில் உள்ள 1.7 மில்லியன் மக்களின் மிக அவசரமான மனிதாபிமான தேவைகளை பூர்த்தி செய்ய 47.2 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஐக்கிய நாடுகள் சபை கோருகிறது. இதில், 10 மில்லியன் அமெரிக்க டொலர்கள் உலக உணவுத் திட்ட செயல்பாடுகளுக்கானது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# கடன் மறுசீரமைப்புக்காக நிதி, சட்ட நிறுவன பிரதிநிதிகள் இலங்கைக்கு

கொழும்பு, ஜூன் 16

கடன் மறுசீரமைப்பிற்காக நிதி மற்றும் சட்ட ஆலோசனை நிறுவனப் பிரதிநிதிகள் இலங்கை வந்துள்ளனர்.

குறித்த பிரதிநிதிகள் நேற்று முன் தினம் நாட்டுக்கு வருகை தந்ததாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதற்கமைவாக, இலங்கையின் வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப்பதற்காக இலங்கையால் தெரிவு செய்யப்பட்ட நிதி மற்றும் சட்ட ஆலோசனை நிறுவனங்களான "லசார்ட்" மற்றும் "கிளிஃபோர்ட் சான்ஸ்" ஆகியவற்றின் பிரதிநிதிகள் இலங்கை வந்துள்ளனர். (அ)

# அரச வைத்தியசாலைகளுக்கு தனியார் மருந்தகங்களிலிருந்து மருந்து வகைகள்

கொழும்பு, ஜூன் 16

அரச வைத்தியசாலைகளுக்கும், தற்போது தனியார் மருந்தகங்களில் இருந்து மருந்துகளை கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பல அத்தியாவசிய மருந்துகளுக்கு தற்போது தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அந்த சங்கத்தின் பொருளாளர் மஞ்சுள ஜயவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அவசர விபத்து ஏற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுபவருக்கு சாதாரண சேலைனை வழங்குவதற்கு வெளித் தரப்பினரை நாட வேண்டிய நிலை உள்ளது.

நகர மற்றும் கிராமம் என்ற வித்தியாசமின்றி, அனைத்து வைத்தியசாலைகளிலும் இந்த நிலை உள்ளது.

பெருமளவான கிராமப்புற வைத்தியசாலைகளில் சாதாரண சேலைன்களின் கையிருப்பு முடிவடைந்துள்ளது-என்றார். (அ)

# பணம் செலுத்தினால் மட்டுமே எரிபொருள்!

## நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருளை விநியோகிப்பதில் புதிய நடைமுறை

கொழும்பு, ஜூன் 16

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு தற்போது வழங்கப்பட்டுள்ள காசோலை வசதி உடனடியாக நிறுத்தப்பட்டு, பணம் செலுத்தப்பட்ட பின்னர் எரிபொருளை விநியோகிக்கும் முறைமை நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாக அகில இலங்கை பெற்றோலிய தனியார் தாங்கி ஊர்தி உரிமையாளர்கள் சங்கத்தின் இணைச் செயலாளர் சாந்த சில்வா குறிப்பிட்டார்.

நேற்று முதல் முன்பதிவுகளுக்கு அமைய, கொடுப்பனவு செலுத்தப்பட்ட பின்னர் மாத்திரம், எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருளைக் கொண்டுசெல்ல புதிய முறைமை நடைமுறைப் படுத்தப்படவுதாக, தெரிவிக்கப்பட்டுள்ளது.

எந்தெந்த எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் விநியோகிக்கப்படுகிறது என்பது தொடர்பான தகவல்கள், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இணையத் தளத்தில் வெளியிட்டுள்ளன.

அந்த எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு மாத்திரமே எரிபொருள் விநியோகிக்கப்படும். எனவே, எல்லா எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் பொதுமக்கள் அவசியமற்ற முறையில் வரிசைகளில் காத்திருப்பதில் அர்த்தமில்லை என்ற நிலையே தற்போது உள்ளதாக அகில இலங்கை பெற்றோலிய தனியார் தாங்கி ஊர்தி உரிமையாளர்கள் சங்கத்தின் இணைச் செயலாளர் சாந்த சில்வா குறிப்பிட்டார். (அ)

# ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தின் கடந்த வருட நட்டம் 45674 மில்லியன் ரூபா

கொழும்பு, ஜூன் 16

ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தின் கடந்த வருடத்துக்கான தேறிய நட்டம் 45 674 மில்லியன் ரூபா என குழுவின் அறிக்கையில் தெரியவந்துள்ளது.

அத்துடன், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் இத்தகைய நட்டத்தை எதிர்நோக்கிய தருவாயிலும் கூட, உயர் முகாமைத்துவ அதிகாரி ஒருவருக்காக மாதாந்தம் 3.1 மில்லியன் ரூபாவை வேதனமாக செலுத்தியுள்ளனர்.

இந்தக் கொடுப்பனவுகளுக்கான நிதி, அமைச்சரவை பத்திரம் மற்றும் பொது நிதி ஊடாக வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் கோப் குழு அவதானம் செலுத்தியுள்ளது. (அ)

# தெஹிவளையில் திடீரென குவிக்கப்பட்ட இராணுவம்

கொழும்பு, ஜூன் 16

நாட்டில் கடந்த சில மாதங்களாக எரிபொருளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இந்நிலையில், எரிபொருளை பெற்றுக் கொள்வதற்காக எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னால் மக்கள் தொடர்ந்து வரிசையில் காத்திருக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் நேற்று எரிபொருள் வழங்குமாறு கோரி தெஹிவளையில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் காலி வீதியை மறித்து போராட்டத்தை முன்னெடுத்ததால், கொழும்பு- காலி வீதியில் இரு பக்கங்களிலும் கடுமையான வாகன நெரிசல் ஏற்பட்டது.

தற்போது குறித்த பகுதியில் ஏராளமான பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டனர். (அ)

# கொடிகாமம் பகுதி விபத்தில் உயிரிழந்தவர் மீசாலை வாசி

யாழ்ப்பாணம், ஜூன் 16

தென்மராட்சி - கொடிகாமம் பகுதியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற வீதி விபத்தில் உயிரிழந்த நபர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

ஏ-9 வீதி கொடிகாமம், கொயிலாமனைச் சந்திப் பகுதியில் நேற்று முன் தினம் மாலை 3:00 மணியளவில் கார் மற்றும் சைக்கிள் மோதி இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்திருந்தார்.

மீசாலை கிழக்கு, மீசாலைப் பகுதியை சேர்ந்த நடராசா - பகீரதன் (வயது-46) என்பவரே உயிரிழந்துள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

ஊடகங்களில் தகவல்கள் வெளியானதையடுத்து உறவினர்கள் இவரை அடையாளம் காட்டியுள்ளனர். (அ-02)

# ஐ.தே.கவுடன் நாங்கள் இணையமாட்டோம்!

## வீரவன்ஸ திட்டவட்டம்

கொழும்பு, ஜூன். 16

புதிய அரசியல் கூட்டணியின் பெயர், சின்னம் உள்ளிட்ட விபரங்கள் விரைவில் அறிவிக்கப்படும் - என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

கூட்டணி கட்சிகளின் விசேட கூட்டத்தின் பின்னர், ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையும் திட்டம் தமது கூட்டணிக்கு கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டார். அதேவேளை, ரஷ்யாவுடன் பேச்சு நடத்தப்படும் எனவும் விமல் வீரவன்ஸ கூறினார். (அ)

# மக்கள் குரலுக்கு செவிசாய்க்குக!

## எம்.பிக்களை வலியுறுத்தி ஒரு இலட்சம் கையெழுத்து

**கொழும்பு, ஜூன் 16**

**சுமார் ஓர் இலட்சம் பேரின் கையெழுத்துடன் மக்களின் குரலுக்குச் செவிசாய்க்குமாறு பாராளுமன்ற உறுப்பினர்களைக் கோரும் கையெழுத்துச் சேகரிப்பு இடம்பெற்று வருகின்றது என அதன் செயற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.**

மக்களின் குரலுக்குச் செவிசாய்க்குமாறு கோரும் அந்தக் கோரிக்கை மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை மக்களின் சமூக அரசியல் பொருளாதார வாழ்வு முற்றாக செயலிழந்து ஓர் அவல நிலைக்குள் நாம் தள்ளப்பட்டுள்ளோம். கடந்த இரண்டு வருடங்களாக நிலவிய ஊழல் முற்றிலும் தவறான முகாமைத்துவம் மற்றும் எதேச்சதிகார மான ஆட்சி முறைமை என்பனவே நாட்டை இந்தளவு வங்குரோத்து நிலைமைக்குத் தள்ளியுள்ளன. இது உயிர், உடமை அழிவுகள், மக்களின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத துன்பத்துக்கு வழிவகுத்துள்ளதோடு சமூக மற்றும் அரசியல் நெருக்கடியையும் தோற்றுவித்துள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷ வுடன் மக்களால் நிராகரிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து ஆட்சியை முன் கொண்டு செல்ல வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் ஒருபோதும் கோரவில்லை என்பதை பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்தச் சூழ்நிலையில் இலங்கை மக்களால் தமது பிரிதிநிதிகளாகத் தெரிவுசெய்யப்பட்ட அரச மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் பின்வரும் விடயங்களை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று இதன் கீழ் கையொப்பமிடும் இலங்கை மக்களாகிய நாம் கோரிக்கை விடுக்கின்றோம்.

-நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதன் மூலமே அரச முறைமையில் முறைசார் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பதைக் கவனத்திற்கொள்ளல் வேண்டும்.

-ஜனாதிபதி கோட்டபாய, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தலைமை வகிக்கும் தற்போதைய அரசு நாடு தற்போது அனுபவிக்கும் வங்குரோத்து நிலைமைக்கு இட்டுச் சென்ற ஒரு தோல்வியடைந்த அரசு என ஏற்றுக்கொண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் அந்த அரசைப் பதவியில் நீடிக்கும் எந்தவித ஆதரவையும் வழங்கக்கூடாது.

-இந்தக் கோரிக்கையை முன்கொண்டு செல்லும் வகையில் முன்னெடுத்துள்ள மக்கள் தலைமையிலான எந்தவொரு போராட்டத்தையும் பாராளுமன்ற உறுப்பினர்கள் திரிபுபடுத்த முயற்சி மேற்கொள்ளக்கூடாது.

-தற்போதைய நெருக்கடியைச் சமாளிக்க அனைத்துக் கட்சி அரசு ஒன்றை உருவாக்க வேண்டும். அத்தோடு அடுத்த தேர்தலுக்கான காலவரையறையை அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து தீர்மானிக்க வேண்டும்.

-நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதும் பாராளுமன்றத்துக்குப் பொறுப்புக்கூறும் வகையில் காணப்படும் பிரதம மந்திரியின் தலைமையில் அமைச்சரவைக்கு ஆட்சி அதிகாரம் வழங்கும் 21ஆவது சீர்திருத்தச் சட்டம் தேவையான எந்தவொரு திருத்தத்துடனும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்போது அத்திருத்தம் நிறைவேற்றப்படுவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்குதல் வேண்டும்- என்றுள்ளது. (அ)



## கோண்டாவில் பகுதியில் திருடப்பட்ட பெறுமதிமிக்க கட்டட பொருட்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜுன் 16

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோண்டாவில் பகுதியில் திருடப்பட்ட 20 இலட்சம் ரூபா பெறுமதியான கட்டடப் பொருட்கள் கோப்பாய் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த வாரம் கோண்டாவில் பகுதியில் ஒப்பந்தகாரர் ஒருவரினால் வேலை செய்யப்பட்டுக்கொண்டிருந்த வீட்டில் வைக்கப்பட்டிருந்த பெறுமதியான நில மாபிள்கள், கழிவறைக்கு பயன்படுத்தும் மாபிள் உபகரணங்கள், மின் மோட்டார் மற்றும் மின் வயர்கள், இலத்திரனியல் உபகரணங்கள் உள்ளடங்களாக சுமார் 20 இலட்சம் ரூபா பொருட்கள் திருடப்பட்டிருந்தன.


இது தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட நிலையில் துரிதமாக செயற்பட்ட கோப்பாய் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் குறித்த திருட்டுடன் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்துள்ளதோடு திருடப்பட்ட பொருட்களையும் மீட்டுள்ளனர். (அ-03)

## மக்களின் பிரச்னைக்கு முதலில் தீர்வு வேண்டும்!

### மகிந்த ராஜபக்ஷ கருத்து

கொழும்பு, ஜுன் 16

"அரசமைப்பின் 21ஆவது திருத்தம் கொண்டுவரப்படுவதற்கு முன்னர் நாட்டு மக்களின் பிரச்னைகளுக்குத் தீர்வு காணப்படவேண்டும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்கி பாராளுமன்றத்தைப் பலப்படுத்தும் யோசனை 21ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டால் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அதற்கு ஆதரவளிக்கும்."



- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

தனது கட்சி உறுப்பினர்கள் குழுவுடனான கலந்துரையாடலின்போதே மகிந்த ராஜபக்ஷ இதனைத் தெரிவித்தார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் சிங்கள ஊடகம் ஒன்றிடம் கூறினார். (அ)

## 6 கட்டங்களின் அடிப்படையில் இலங்கைக்கு சீனாவின் அரிசி

கொழும்பு, ஜுன் 16

இலங்கைக்கு வழங்கப்பட்ட 500 மில்லியன் யுவான் மனிதாபிமான உதவியின் கீழ் ஒரு தொகை அரிசி எதிர்வரும் வாரம் நாட்டை வந்தடையவுள்ளது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியை கட்டுப்படுத்தும் வகையில் 500 மில்லியன் யுவான் பெறுமதியான பொருட்களை இலங்கைக்கு நன்கொடையாக வழங்குவதாக சீனா அண்மையில் அறிவித்திருந்தது.

இதன்படி குறித்த மனிதாபிமான உதவியின் கீழ் இலங்கைக்கு வழங்கப்பட்ட முதலாவது தொகை அரிசி எதிர்வரும் 25 ஆம் திகதி நாட்டை வந்தடையவுள்ளதாக இலங்கைக்கான சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

மேலும் ஆறு கட்டங்களின் அடிப்படையில் குறித்த அரிசி நாட்டை வந்தடையவுள்ளதுடன் மேலும் இரண்டாவது தொகை எதிர்வரும் 30 ஆம் திகதி நாட்டை வந்தடையவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இரண்டாம் கட்ட அரிசித் தொகை நாட்டின் பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவுத் திட்டத்திற்கு பயன்படுத்தப்படவுள்ளதாக சீனத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## 20,000 தனியார் பஸ்களில் 3,000 மட்டுமே சேவையில்!

கொழும்பு, ஜுன் 16

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் 20,000 தனியார் பஸ்களில் 3,000 மட்டுமே தற்போது சேவையில் ஈடுபடுவதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

நாளை வெள்ளிக்கிழமைக்குள் தேவையான எரிபொருள் வழங்கப்படாவிட்டால் தனியார் பஸ் சேவைகள் முற்றாக நிறுத்தப்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

இதேவேளை, தனியார் போக்குவரத்து பஸ் சேவையாளர்களுக்காக கொழும்பு பஸ்டியன் வீதியில் பிரத்தியேக எரிபொருள் நிலையமொன்றை போக்குவரத்து அமைச்சு நிறுவியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

## மருந்து தட்டுப்பாட்டுக்கு 6 வாரங்களுக்குள் முடிவு!

கொழும்பு, ஜுன் 16

இலங்கையில் நிலவும் மருந்து தட்டுப்பாடு அடுத்த ஆறு வாரங்களுக்குள் முடிவுக்கு வரும் என சுகாதார அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு தேவையான நிதி கிடைத்துள்ளதாக சுகாதார அமைச்சர் - கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

தற்சமயம் 14 அத்தியாவசிய மருந்துகள் போதுமான அளவு கையிருப்பில் இருப்பதாகக் குறிப்பிட்ட அவர், நாடு முழுவதும் 186 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

தட்டுப்பாடு நிலவும் மருந்துகள் விரைவில் இறக்குமதி செய்யப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## ரயில் கட்டணத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்!

### தம்மிக ஜயசுந்தர கோரிக்கை

கொழும்பு, ஜுன் 16

உடனடி கட்டணத் திருத்தத்திற்காக அரசாங்கம் கொள்கை ரீதியான தீர்மானம் ஒன்றை எட்ட வேண்டும் என ரயில் திணைக்கள பொதுமுகாமையாளர் தம்மிக ஜயசுந்தர கோரியுள்ளார்.

அதிகரித்து செல்லும் எரிபொருள் கட்டணத்தால் ஏற்படும் செலவினத்தை ரயில் திணைக்களத்தால் சமாளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது வரையில் பஸ் கட்டணத்தில் 20 முதல் 27 சதவீதமான கட்டணமே ரயில் சேவையில் அறவிடப்படுகின்றது.

டீசல் விலை அதிகரிப்புடன் செலவு பாரியளவில் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் அரசாங்கம் எதிர்காலத்தில் கொள்கை ரீதியிலான தீர்மானத்தை மேற்கொண்டு ரயில் கட்டணத்தை அதிகரிக்க ரயில் திணைக்களத்துக்கு அனுமதி வழங்கும் என எதிர்ப்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# சீன - ஆஸி உறவில் விரிசல்களும்... புதிய அரசின் நல்ல சமிக்ஞையும்...

ஐங்கரன் விக்கினேஸ்வரா

ஆஸ்திரேலியா மற்றும் சீனாவுக்கு இடையே முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக இருந்த பொருளாதார நல்லுறவில் கடந்த சில ஆண்டுகளாக பாரிய விரிசல்கள் விழுந்துள்ளது என்பது உண்மையே.

சீனாவில் உய்குர் இஸ்லாமியர்களை நடத்தும் விதம் மற்றும் ஹாங்காங் போராட்டங்கள் குறித்து ஆஸ்திரேலியா அரசு தொடர்ந்து குரல் எழுப்பி வருவதால் சீனா மிக அதிருப்தியை வெளிக் காட்டியது.



### கோவிட்19 விசாரணை

அத்துடன் 2020இல் கொரோனாவின் ஆரம்பம் மற்றும் தோற்றம் குறித்த உலகளாவிய விசாரணைக்கு வேண்டுகோள் வைத்ததும ஆஸ்திரேலியா அரசு தான். அதனால் பெய்ஜிங் அரசு மிக அதிருப்தியில் இருந்தது. ஆயினும் ஆஸ்திரேலியா - சீனா உறவில் விரிசல் விழ முக்கிய காரணம், 2020 மே மாதத்தில், சீன அதிகாரிகள் ஆஸ்திரேலியாவிலிருந்து வரும் பார்லி இறக்குமதிக்கு 80 சதவீதம் சுங்கக் கட்டணத்தை விதிப்பதாக அறிவித்தமையே முக்கிய காரணம் ஆகும்.

அரசியல் முதல் கல்வி நிறுவனங்கள் வரை ஆஸ்திரேலியாவில் தொடர்ந்து வளர்ந்து வரும் சீனாவின் செல்வாக்கு குறித்து ஏற்பட்ட அச்சத்தின் விளைவு தான் அன்றைய ஆஸ்திரேலியா அரசின் கடுமையான நிலைப்பாட்டிற்கு காரணமாக அமைந்தது. அத்துடன் கொரோனா காலக்கட்டத்திலும் கூட, இந்தோ- பசிபிக் பகுதியில் சீனாவின் வளர்ச்சி இரு நாட்டு உறவு முறிவடைய கூடுதல் காரணமாக அமைந்தது.

ஏற்றுமதி மற்றும் இறக்குமதி இரண்டிலும் ஆஸ்திரேலியாவின் மிகப் பெரிய வர்த்தக கூட்டாளியாக எப்போதும் சீனா உள்ளது. ஆஸ்திரேலியாவின் ஏற்றுமதியில் சீனாவின் பங்கு, வேறு எந்த நாட்டைக் காட்டிலும் 2019 ஆம் ஆண்டில், 117 பில்லியன் ஆஸ்திரேலிய டாலர்கள் அல்லது 38 வீதத்தை எட்டியுள்ளது. சுரங்கம், சுற்றுலா, கல்வி போன்ற ஆஸ்திரேலிய துறைகள் பலவும் சீனாவுடனான வர்த்தகத்தால் பயனடைகின்றன. பால், வைன், மற்றும் இறைச்சி போன்ற பொருட்களை சீனா ஆஸ்திரேலியாலிருந்து இறக்குமதி செய்கிறது.

### சீனாவின் முதலீடு

ஆசியாவின் மிகப்பெரிய அரசான சீனா, சுரங்கம் மற்றும் விவசாயத்துறை முதலீடும் இதில் மிகப்பெரிய பங்களிப்பை கொண்டுள்ளது. ஆஸ்திரேலியாவின் உள்கட்டமைப்பு மற்றும் ரியல் எஸ்டேட் துறைகளில் சீனாவின் முதலீடு பல ஆண்டுகளாக அதிகரித்து வருகிறது. ஆஸ்திரேலியாவில் படிக்கும் வெளிநாட்டவர்களில் அதிகம் சீனா மாணவர்களே என்பதும் உண்மை.

கடந்த சில ஆண்டுகளாக ஏற்கனவே மோசமடைந்து வரும் இரு நாடுகளின் உறவில் மேலும் விரிசலை ஏற்படுத்தியது இந்த இரண்டு முக்கிய காரணங்கள் முக்கியமானவை.

ஏப்ரல் 2020இல், ஆஸ்திரேலியாவின் உள்துறை அமைச்சர் பீட்டர் டட்டன், கொரோனாவின் தோற்றம் மற்றும் ஆரம்ப கால கையாளுதல் குறித்த விசாரணையைத் தொடங்க பரிந்துரைத்தார். இதற்கு ஆஸ்திரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் மற்றும் பிரதமர் ஸ்காட் மோரிசன் ஆகியோர் ஆதரவு தெரிவித்தனர். மோரிசன் இந்த ஆலோசனையை “முற்றிலும் விவேகமானது மற்றும் நியாயமானது” என்று அழைத்தார்.

மேலும் உலகம் முழுவதும் பல உயிர்களைக் கொன்ற ஒரு வைரஸைப் பற்றி உலகம் அனைத்தையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார். இதற்கு சீனாவின் பதிலை ஆஸ்திரேலியாவிற்கான சீன தூதர் செங்க் ஜிங்யே ஆவேசமாக “ஆஸ்திரேலியா அமெரிக்காவுடன் இணைந்து கொண்டு சீனாவுக்கு எதிராக பழிகளை உருவாக்குவதாக”குற்றம் சுமத்தினார்.

ஆஸ்திரேலியாவை தண்டிக்கும் வண்ணம் உயர் கல்விக் கற்கவும், சுற்றுலாவுக்காக செல்ல தடை விதிக்கவும் , வைன் மற்றும் மாட்டிறைச்சி இறக்குமதிக்கும் தடை விதிக்கவும் சீன அரசு உத்தரவை பிறப்புத்துக் கொண்டது.

2020 மே மாதத்தில், சீன அதிகாரிகள் ஆஸ்திரேலியாவிலிருந்து வரும் பார்லி இறக்குமதிக்கு 80 சதவீதம் சுங்கக் கட்டணத்தை விதிப்பதாக அறிவித்தனர். ஆஸ்திரேலியா பார்லிக்கு சீனாவில் மிகப்பெரிய சந்தை இருக்கிறது. இந்த அறிவிப்புக்கு சில நாட்களுக்குப் பிறகு சீனா சுங்க கட்டணத்தை 80.5 வீதம் அதிகரித்தனர்.

சீனா வர்த்தக விசாரணையை தொடங்கியதுடன் ஆஸ்திரேலியாவின் நான்கு பெரிய மாட்டிறைச்சி பதப்படுத்தும் ஆலைகளுக்கான இறக்குமதி அனுமதிகளையும் நிறுத்தியது.

### பத்திரிகையாளர்கள் தடுப்புக்காவல்

ஆஸ்திரேலியாவை சேர்ந்த செய்தியாளர் செங்க் லெய் பெய்ஜிங்கில் சீன அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். அவர் சீன தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் தரும் வகையிலான குற்ற செயல்களில் ஈடுபட்டதாகி கூறி கைது செய்யப்பட்டார். ஆஸ்திரேலிய அரசு, அந்த பத்திரிக்கையாளர், அறியப்படாத இடம் ஒன்றில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருப்பதாக கூறியது. இதன் பின்னர், சீனாவில் பணிபுரியும் மேலும் இரண்டு ஆஸ்திரேலிய பத்திரிகையாளர்கள் விசாரிக்கப்பட்டு செங் லீ தடுப்புக்காவல் வழக்கின் நபர்களாக அறிவிக்கப்பட்டனர். இதுவே இரண்டாவது முக்கிய காரணமாக பார்க்கப்படுகிறது.

அத்துடன் இரு ஆஸ்திரேலியா ஊடகவியலாளர்களும் சீன காவல்துறையினரால் மாநில பாதுகாப்பு அமைச்சகத்திடம் விசாரணைக்கு வருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். அவர்களின் வீடுகளில் சோதனை நடத்திய பிறகு, அவர்களை ஆஸ்திரேலியாவுக்கு செல்ல அனுமதி மறுத்தது சீன அரசு. அவர்கள் பிறகு ஆஸ்திரேலியா அரசு அதிகாரிகளிடம் தஞ்சம் புகுந்தனர். ஐந்து நாட்கள் தொடர் கண்காணிப்பிற்கு பிறகு ஆஸ்திரேலியாவிற்கு திரும்பிச் செல்ல அனுமதி வழங்கப்பட்டது. அவர்கள் சென்ற பிறகு, ஆஸ்திரேலிய ஊடங்களால் பணிக்கு அமர்த்தப்பட்ட ஊடகவியலாளர்கள் யாரும் அந்நாட்டில் இல்லை. அவர்கள் அங்கிருந்து சென்ற பிறகு, சீனாவின் அரசு செய்தி நிறுவனமான ஷின்ஹூவா செய்தி ஒன்றை வெளியிட்டிருந்தது. ஆஸ்திரேலிய உளவுத் துறை ஆஸ்திரேலியாவில் உள்ள சீன ஊடகவியலாளர்கள் பலர் மீதும் சோதனை நடத்தியதாகவும் இது அவர்களின் உரிமைகளை “கடுமையாக மீறியதாகவும்” கூறியது. இந்த குற்றச்சாட்டுக்கு ஆஸ்திரேலிய அதிகாரிகள் பதில் ஏதும் தரவில்லை.

### உய்குர் இஸ்லாமியர்கள் எழுச்சி

இரண்டு நாடுகளும் இதற்கு முன்பும் கருத்து ரீதியாக முரண்பட்டுள்ளனர். சீன அரசால் நடத்தப்படும் வதை முகாம்களில் உய்குர் இஸ்லாமியர்கள் வைக்கப்பட்டிருப்பது செய்தியாக வெளியானதில் இருந்து ஆஸ்திரேலியா தன்னுடைய கருத்தை அறிவித்ததுடன், மனித உரிமைகளில் நிலை குறித்து அதிக அளவு கவலை கொண்டுள்ளதாகவும் அந் நாடு கூறியது.

இதேபோல், சீனா ஹாங்காங்கில் தேசிய பாதுகாப்புச் சட்டத்தை விதித்த பின்னர், ஆஸ்திரேலியா ஹாங்காங்குடனான நாடு கடத்தும் ஒப்பந்தத்தை நிறுத்தியது. இந்த சட்டம் ஹாங்காங்கின் சுயாட்சியைக் குறைமதிப்பிற்கு ஆளாக்குவதாகவும், சீனாவுக்கு எதிரான எதிர்ப்பை காட்டியதாக சீனாவால் குற்றம் கூறப்பட்டது.

அத்துடன் ஆஸ்திரேலியாவும் ஹாங்காங் குடியிருப்பாளர்களுக்கு விசா நீட்டிக்க முடிவு செய்தது. இரண்டு நிகழ்வுகளிலும் சீனா கடுமையாக ஆட்சேபித்ததுடன் ஆஸ்திரேலியாவை அதன் “நாட்டின் உள்விவகார விஷயங்களில்” தலையிட வேண்டாம் என்று கேட்டுக்கொண்டது.

அன்றைய லிபரல் அரசாங்க பிரதமர் மோரிசன் கூட சீனாவின் ஆக்கிரமிப்பு மற்றும் விரிவாக்கத்தை எதிர்கொள்ள ஒருமித்த கருத்துகளை உடைய ஜனநாயக நாடுகள் இணைய வேண்டும் என்று கூறினார். ஆஸ்திரேலியா அரசு சீனர சார்பு நிலையில் இருந்து விலகிச் செல்வதற்கான வழியை தேட துவங்கியது.மேலும் ஒருமித்த கருத்துகளை கொண்ட கூட்டாளிகளை தேடியது. அதன் கருத்துகளுடன் ஒருமித்த இந்தியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் கூட்டணி வைப்பது தொடர்பாக அறிவித்தது,

இதன்பின் இந்தியா, அமெரிக்கா மற்றும் ஜப்பானின் வெளியுறவுத்துறை அமைச்சர்களுடன் பேசிய முன்னாள் ஆஸி. வெளியுறவுத்துறை அமைச்சர், திறந்த, நம்பிக்கை கொண்ட, இந்தோ-பசிபிக் பிராந்தியத்தின் தேவையை எடுத்துரைத்தார். அத்துடன் இவை விதிகளால் ஆளப்பட வேண்டுமே தவிர அதிகாரங்களால் அல்ல என்று கூறியமை சீன அரசை மேலும் அதிருப்திக்கு உள்ளாக்கியது.

நீண்ட கால விரிசல்களின் பின்னர், கடந்த மே மாத ஆஸ்திரேலியாவின் புதிய லேபர் அரசுடன் சீன உறவு புதுப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### சிங்கப்பூர் பாதுகாப்பு உச்சிமாநாடு:

சிங்கப்பூர் பாதுகாப்பு உச்சிமாநாட்டில் ஆஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சர் ரிச்சர்ட் மார்ல்ஸ் சீன பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் வெய் ஃபெங்கே உடனான சந்திப்பை ஒரு முக்கியமான இராஜதந்திர நடவடிக்கை என்றே கருதலாம்.

ஆஸ்திரேலிய, சீன பாதுகாப்பு அமைச்சர்கள் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக சிங்கப்பூரில் சந்தித்து பேச்சு நடத்தினர். இரு நாடுகளுக்கு இடையிலான உறவு மோசமடைந்துள்ள நிலையில் இந்தச் சந்திப்பு முக்கிய முன்னேற்றப்படி என இருதரப்பும் அறிவித்துள்ளனர். •



### கூகுள் சுந்தர் பிச்சை முதல் ட்விட்டரின் பராக் அக்ரவால் வரை:

# அமெரிக்காவில் உயர் பொறுப்பை அலங்கரிக்கும் இந்தியர்கள்: வெற்றிக்கு காரணம் என்ன?

அருண் குமார் பொன்னுசாமி

அமெரிக்கா“ என்பது சிலருக்கு ஒரு நாட்டின் பெயராக மட்டுமே தெரியும், ஆனால் இந்தியா உள்ளிட்ட பல்வேறு உலகின் வளரும் நாடுகளை சேர்ந்தவர்களுக்கு அது இன்னமும் ‘கனவு நாடாகவே’ விளங்கி வருகிறது என்று உறுதியாக சொல்ல முடியும்.

ஒரு பட்டனை தட்டினால் எந்த விவரமும் விரல் நுனியில் கிடைத்துவிடும் இந்த காலத்திலேயே அமெரிக்கா மீதான மோகம் குறைந்தபாடில்லை, ஆனால் இன்றைய அமெரிக்கா எதற்காக அறியப்படுகிறதோ, நாளைக்கு எதற்காக அறியப்படப்போகிறதோ அதற்கு மிகப் பெரும் காரணமாக இந்தியாவில் இருந்து, குறிப்பாக தமிழ்நாட்டில் இருந்து எண்ணற்ற கனவுகளு டன் ஒரு சில தசாப்தங்களுக்கு முன்னால் அமெரிக்காவுக்கு சென்றவர்களே இருக்கிறார்கள் என்று சொன்னால் மறுப்பதற்கில்லை.

உலக சந்தையில் பல நிறுவனங்களின் தலைமை செயலதிகாரிகள் இந்தியாவை தாய்நாடாக கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கூகுளின் சுந்தர் பிச்சை, மைக்ரோசாஃப்ட்டின் சத்ய நாதெல்ல, நோர்வடிசின் வசந்த் நரசிம்மன், ஐபிஎம்மின் அரவிந்த் கிருஷ்ணா, ட்விட்டரின் பராக் அக்ரவால், அடோபியின் சாந்தனு நாராயண் ஆகியோர் பலரின் கவனத்தை ஈர்த்த வெற்றிகரமான தலைமை செயலதிகாரிகளாக விளங்குகின்றனர்.

எப்படி இந்தியர்கள், குறிப்பாக தமிழர்கள் இவ்வளவு திறம்பட செயல் ஆற்றுகிறார்கள் என்ற கேள்வி பலருக்கும் இருக்கிறது. மேலும் இந்தியர்கள் ஏன் தாய்நாட்டில் பணிபுரியாமல் மேலை நாடுகளுக்குச் செல்கின்றனர் என்ற கேள்வியும் உண்டு. இதை பற்றி சற்று விளக்கமாக பார்ப்போம்.

**எப்போது இந்தியர்கள் அதிகளவில் வெளிநாடுகளை நோக்கி நகர்ந்தனர்?**

Y2K என்ற மிகப் பெரிய தொழில்நுட்பம் சார்ந்த பிரச்னையை பற்றி நீங்கள் கேள்விப்பட்டதுண்டா? இதை ஆங்கிலத்தில் 'Year 2000 Problem' என்பார்கள். Y என்றால் Year என்றும் 2000-வது ஆண்டை சுருக்கி 2K என்றும் கூறினர். இந்த காலகட்டத்தில் தான் இந்தியர்கள் பலருக்கு அமெரிக்கா போன்ற மேலை நாடுகளில் வாய்ப்புகள் அதிகளவில் கிடைத்தன. Y2K என்பது, 2000-ம் ஆண்டுக்கு முன்னர் வரை ஆண்டை இரண்டு இலக்கம் கொண்டே நாம் கணினியில் சேமித்து வந்தோம் 1998-ஐ 98 என்று மட்டுமே குறிப்பிட்டோம் 2000-வது ஆண்டு வந்த பிறகு ‘00’ என்று கணினி சேமிப்பில் எடுத்துக்கொண்டதால் பல பிரச்னைகள் உருவாகின.

இந்த இரு எண் இலக்க பைனரி கோட் (Binary Code) என்பார்கள். இதனால் தொழில்நுட்ப துறையில் பல்வேறு பிரச்னைகள் ஏற்பட்டு அது உலகளாவிய பங்குச்சந்தை வீழ்ச்சிக்கும் வித்திட்டது. பைனரி கோட் முறையில் இந்தியர்கள் சற்று கைத்தேர்ந்தவர்களாக இருந்த காரணத்தினால் அவர்களுக்கு அயல் நாடுகளில் வேலைவாய்ப்பு அதிகளவில் கிடைத்தது. எனவே, அதை நோக்கி பலரும் நகர்ந்தனர். இப்படித்தான் லட்சக்கணக்கான இந்தியர்களின் அயல்நாட்டு படையெடுப்பு தொடங்கியது.

இந்த Y2K பிரச்னை சரியான பிறகு வெளிநாடுகளில் வேலை இருக்காது என்றனர் பலர். ஆனால், இந்தியர்கள் பொதுவாகவே புதிய விடயங்களை ஆர்வத்துடன் கற்றுக்கொள்ள நினைப்பவர்களாக அறியப்படுபவர்கள். அப்படி கற்றுக்கொண்டு இப்போது வரை பல துறைகளில் சாதித்துக்கொண்டே இருக்கின்றனர்.

**1. கூட்டு குடும்ப வாழ்க்கை முறை**

இந்தியாவில் பல உறவு முறைகளை பாராட்டி வாழ்வதே வழக்கம். அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி, தங்கை, அண்ணன் என்று வாழும் வாழ்க்கை முறை இன்னும் வழக்கத்தில் உண்டு. அப்படி உறவின் மேன்மையை புரிந்து கொண்டு அவர்களை அனுசரித்து அன்புடன் பழகி, வாழ்க்கையை வழி நடத்தியதால் ஒரு தொழில் கட்டமைப்பிலும் அவர்களால் சிறப்பாக பணியாளர்களை அனுசரித்து, திறம்பட வேலை செய்து வெற்றி வாகை சூட முடிகிறது.

**2. கலாசார பின்புலம்**

இந்தியா மதம் மற்றும் மொழி சார்பற்ற நாடாக உலக அரங்கில் பார்க்கப்படுகிறது. இதனாலேயே இங்கு பல்வேறு மொழிகளும் மதங்களும் வாழ்கின்றன. அப்படிப்பட்ட சூழ்நிலையில் வளரும் எந்த ஒரு இந்தியனுக்கும் சூழலுக்கேற்ப வாழும் தன்மை உண்டு. ஒவ்வொரு நிறுவனத்தின் மிக முக்கிய பதவியான தலைமை செயலதிகாரியாக பல முடிவுகளை எடுக்க வேண்டிய நிலை வரும். அப்போது சீனா, ரஷ்யா,



அமெரிக்கா என்று பல நாடுகளின் நிலையில் இருந்து யோசித்து செயலாற்ற வேண்டும். அப்போது அந்த பொறுப்பை ஒரு இந்தியரிடம் கொடுக்கும் பட்சத்தில் சிறப்பாக மொழி தாண்டி, மதம் தாண்டி, உணர்வுபூர்வமாக முடிவெடுக்க உறுதுணையாக இருக்கும். இது இந்தியர்கள் மீது மற்ற நாட்டவருக்கு மிகுந்த நம்பிக்கையை ஏற்படுத்தி உள்ளது.

**3. வாய்ப்பின் முக்கியத்துவம்**

இந்தியாவில் உணவுக்கு வழியில்லா ஏழ்மை நிலையும் உண்டு, ஆடி காரில் ஒய்யாரமாக செல்லும் சொகுசு வாழ்க்கை முறையும் உண்டு. இதைப் பார்த்து வளர்ந்த எந்த ஒரு இந்தியனுக்கும் வாய்ப்பின் முக்கியத்துவம் புரியும். வாய்ப்பு கிடைத்தால் அதை சரியாக பற்றிக்கொண்டு செயலாற்ற வேண்டும் என்ற துடிப்பு இருப்பதால் அமெரிக்கா போன்ற பெரு நாடுகளில், அங்குள்ள புகழ்ப்பெற்ற நகரங்களில் கிடைக்கும் வாய்ப்பை நிச்சயம் நழுவ விடுவதில்லை. இதுவரை இந்தியர்களை தொழில்நுட்பவாதிகள் என்று கூறிவந்தவர்கள் இப்போது தொழில்நுட்ப வல்லுநர்கள் என்கின்றனர். இந்திய வம்சாவளியை சார்ந்த பலரும் தத்தமது துறைகளில் சாதித்து வருவதே இதற்கு காரணம்.

**4. சமமாக நடத்துதல்**

நிறம், மதம், மொழி தாண்டிய வாழ்க்கையை இந்தியாவில் பார்த்துவிட்டதால் பணியாளர்களையும், சக தொழிலாளர்களையும் சமமாக நடத்தும் நோக்கம் இந்தியாவை பூர்வீகமாக கொண்ட தலைமை செயலதிகாரிகளிடம் அதிகம் உண்டு. எடுத்துக்காட்டாக ஒருமுறை, சுந்தர் பிச்சையிடம் சண்டை இட்டுக்கொண்டு இரு பணியாளர்கள் வந்தபோது இருவரையும் விட்டுக்கொடுக்காமல், இருவரது வாதமும் சரியே என்று சுமூகமாக பேசி பிரச்னையை அவர் தீர்த்து வைத்ததாக கூறப்படுவதை சொல்லலாம்.

**5. விசுவாசமும் விடாமுயற்சியும்**

பராக் அக்ரவால் ட்விட்டரில் கிட்டத்தட்ட 11 ஆண்டுகள் விடாமுயற்சியுடன் பணியாற்றிய பிறகே அந்த நிறுவனத்தின் தலைமை செயலதிகாரி என்ற அங்கீகாரத்தை பெற்றார். சத்யா நாதெல்ல 22 ஆண்டுகள் மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தில் தொடர்ச்சியாக விடாமுயற்சியுடன் பணியாற்றிய பிறகே அதன் தலைமை செயலதிகாரி என்ற மாபெரும் பொறுப்புக்கு உயர்ந்தார். சுந்தர் பிச்சைக்கு பல வாய்ப்புகள் தேடி வந்தபோதும் அவர் கூகுளை விட்டு ஒருபோதும் நகர்ந்தது இல்லை. இப்படி இந்தியர்கள் தங்கள் தொழிலுக்கு உண்மையாகவும், விடாமுயற்சியுடன் செயல்பட்டதாலும் வெற்றி அடைந்திருக்கிறார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

**6. கல்வி முறை**

பொதுவாக மற்ற நாட்டவர்கள் ஒரு துறையை தேர்வு செய்து அதில் மட்டுமே கவனம் செலுத்தி கைத்தேர்ந்தவர்களாக இருப்பார்கள். ஆனால், இந்தியாவை பொறுத்தவரை STEM என்று அழைக்கக்கூடிய கல்வி முறை உண்டு. அதாவது (S - Science, T - Technology, E - Engineering, M - Mathematics) சிறுவயதில் இருந்தே இதைப் பற்றிய அடிப்படை அறிவு கொடுக்கப்படுகிறது. இதனால் எந்த துறையை எடுத்தாலும் அதில் குறைந்தபட்சம் மேலோட்டமான புரிதலாவது இந்தியர்ளுக்கு இயல்பாகவே இருக்கத்தான் செய்கிறது. பொறியியல் பற்றி கூறவே தேவை இல்லை. கிட்டத்தட்ட 2,500 பொறியியல் கல்லூரிகள் இந்தியாவில் இருக்கின்றன. ஒரு வருடத்திற்கு சுமார் 15 லட்சம் பட்டதாரிகள் உருவாகிறார்கள். இதுபோல பல துறை சார்ந்து படித்து வரும் பட்டதாரிகளுக்கு உலகளாவிய தேவை இருப்பதால், இந்தியர்கள் போட்டியில் முந்துவதில் வியப்பேதுமில்லை. மேலும் கிடைக்கும் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்வதே புத்திசாலித்தனம்.

இந்தியாவின் மக்கள் தொகை சுமார் 140 கோடி. இதில் “நேஷனல் சர்வே ஆஃப் இந்தியா” வெளியிட்ட அறிக்கையின்படி, கிட்டத்தட்ட 77.7 வீதம் மக்கள் எழுத்தறிவு பெற்றவர்கள். இவர்கள் அனைவருக்கும் உயர்ந்த பதவி, கைநிறைய சம்பளம் வேண்டுமென்றால் எங்கே செல்வது? இதற்கான பதிலே இந்தியர்களின் உலகளாவிய தேடலின் மூலக்காரணம்.

**7. பணமும் பொறுப்பும்**

இயல்பாகவே இந்தியர்களுக்கு அமெரிக்கர்களை விட சேமிக்கும் பண்பும், பக்குவமும் அதிகம். ஒரு தலைமை அதிகாரிக்கு நிச்சயம் பண சுழற்சி பற்றி அறிந்திருத்தல் அவசியம். பணத்தை பொறுத்தே எந்த தொழிலும், தொழில்சார்ந்த வளர்ச்சியும் அடங்கியுள்ளது. அப்படிப்பட்ட பணத்தை திறம்பட பயன்படுத்துவதால் இந்தியர்களிடம் நிறுவனத்தின் உயர்ந்த பொறுப்பு சென்றடைகிறது என்பது குறிப்பிடத்தக்க காரணங்களில் ஒன்று.

அடுத்து பொறுப்பு, எந்த காரியத்தை எடுத்தாலும் அதை பொறுப்புடன் முடித்து காட்டவேண்டும் என்ற உத்வேகம் இந்தியர்களுக்கு அதிகம் உண்டு. அதனால் அவர்களிடம் கொடுத்த பொறுப்பை தட்டிக்கழிக்காமல் பல்வேறு சவால்கள் வந்தாலும் பொருட்படுத்தாமல் முடித்து காட்டுவர். இது பொதுவான ஒரு கண்ணோட்டமாக தெரியலாம், ஆனால், இதுவே அமெரிக்க பெரு நிறுவனங்களின் மதிப்பீடாகவும் உள்ளது.

**தொடர்ந்து தடம் பதிக்கும் தமிழர்கள்**

பெப்சி கோவின் முன்னாள் தலைவர் இந்திரா நூயி, கூகுளின் சுந்தர் பிச்சை, நோர்வடிசின் வசந்த் நரசிம்மன் எண்ணற்ற தமிழர்கள் உலக அரங்கில் முக்கிய பங்கை வகிப்பவர்களாக திகழ்கின்றனர். அதில் இவர்கள் மூவரும் பலரின் பாராட்டுக்குரியவர்கள். அதிலும் இந்திரா நூயி பெப்சி கோ நிறுவனம் மூழ்க இருந்த கட்டத்தில் சரியான பல முடிவுகளை எடுத்து அதை திறம்பட தூக்கி நிறுத்தியதை விளக்க வேண்டிய அவசியமில்லை. இப்படியாக உலகில் ஆதிக்கம் செலுத்தும் அரசாங்க அமைப்புகள் முதல் தொழில்நுட்ப உலகை ஆண்டு வரும் நிறுவனங்கள் வரை தமிழர்களின் பங்களிப்பு அளவிடற்கரியது.

அமெரிக்காவில் மட்டும் 26,88,000 தமிழர்கள் வாழ்கின்றனர். இது ஒரேயொரு நாட்டில் தமிழர்கள் ஏற்படுத்திய தாக்கம் மட்டுமே, இதுபோன்று உலக நாடுகள் பலவற்றிலும் தமிழர்கள் முத்திரை பதித்து வருகின்றனர். பல்வேறு நாடுகளில் அங்குள்ள சூழ்நிலைக்கு ஏற்றவாறு தங்களின் திறமைகளை மேம்படுத்திக்கொண்டு மற்றவர்களுக்கு முன்மாதிரியாக வாழ்ந்து வரும் லட்சக்கணக்கான தமிழர்களின் சாதனை இனி வரும் காலங்களிலும் தொடரும் தொடர வேண்டும்.

இப்படி இந்திய நாட்டுக்கு பெருமை தேடி தந்த, தரும், தரப்போகின்றவர்களை அதிர்ஷ்டத்தினால் ஜெயித்தார்கள் என்று சிலர் கூறுவது வேடிக்கையாக இருக்கிறது. தர்க்க சிந்தனையினாலும், நுட்பமான அறிவினாலும் இவர்கள் பெற்ற வெற்றி உண்மையிலேயே மகத்தானது. தலைமை செயலதிகாரி என்பது போன்ற பெரிய பதவிகளை நோக்கி இவர்கள் சென்றார்கள் என்பதை விட தலைமை செயலதிகாரி என்ற மிகப் பெரும் பொறுப்பு இவர்களை நோக்கி வந்தது என்பதே பொருத்தமானதாக இருக்கும்.

மேலும், இந்தியர்கள் நடுத்தர மேலாண்மையிலும் பணியாற்றி வருகின்றனர். இதில் நடுத்தர மேலாண்மை பற்றி விளக்கவேண்டுமெனில், எப்படி ஒரு உடலை தாங்க முதுகெலும்பு அவசியமோ அதைப் போன்று, நிறுவனங்களுக்கு நடுத்தர மேலாண்மை பணியும், பணிபுரிபவர்களும் மிகவும் அவசியம். இவர்களே ”சி - லெவல்” என்று சொல்லக்கூடிய உயரதிகாரிகளிடம் சென்று தங்கள் நிறுவனத்தில் நடக்கக்கூடிய அடிப்படை நிகழ்வுகளை எடுத்துரைத்து, பல யோசனைகளைக் கூறி நிறுவனம் வளர வித்திடுவார்.


யார் அதில் திறம்பட செயல்படுகிறார்களோ அவர்களே தலைமை நிர்வாக அதிகாரி என்ற பொறுப்பு வரை செல்ல முடியும். ஒருவர் தலைமை அதிகாரி ஆக வேண்டுமெனில் அவர் “மிடில் மேனேஜ்மென்ட்“ என்று சொல்லக்கூடிய நடுத்தர மேலாண்மையில் சாதிக்க வேண்டியது அவசியம். இப்படிப்பட்ட பொறுப்பில் இந்தியர்கள் பலர் சிறப்பாக பணிபுரிந்து வருகிறார்கள். இப்போது இந்திய திறமைகள் மீதான வெளிநாட்டவர்களின் நம்பிக்கை முன்னெப்போதுமில்லாத அளவை அடைந்துள்ளது.

எனவே, இப்போது வெளிநாட்டு நிறுவனங்கள் இந்தியாவை நோக்கி படையெடுத்து வந்து இங்கே தங்களது தொழிலை விரிவாக்கம் செய்யும் போக்கு அதிகரித்து வருகிறது. இந்த ஆண்டு மட்டும் இதுவரை இந்தியாவில் 83.57 பில்லியன் டாலர்கள் மதிப்புள்ள அந்நிய நேரடி முதலீடுகள் செய்யப்பட்டுள்ளதாக இந்திய அரசு சமீபத்திய வெளியிட்ட தரவு கூறுகிறது. இது எந்த இதற்கு முந்தைய எந்த ஆண்டையும் விட மிக அதிகமான தொகையாகும். இந்தியர்கள் வெளிநாடுகளில் பணிபுரிந்தாலும் சரி, இந்தியாவில் பணிபுரிந்தாலும் சரி, திறமைக்கும் பண்புக்கும் எப்போதும் மதிப்புண்டு என்பது உறுதியாகியுள்ளது.

(பிபிசி)


# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

**மாதிரிப் பரீட்சை வினாத்தாள்**

**18)** 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

**19)**  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

..........................................

**20)** தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122 , 124 , 126 , ............. , ...........    ii) 18 , 15 , 12 , ............. , ...........

**21)** | 3, 9, 14, 6, 10, 12, | பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

.....................................................................

**22)** ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

.........................................................................................

**23)** ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

...................................................................

**24)** பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

...................................................................

**25)** 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ..................................................

**26)** **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 | i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 | ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | | ............ | ......... |

**27)** கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

.......................................................

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?



.......................................................

**29)** ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

.......................................................    (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

**30)** சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)     2)     3) 

**31)** வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி    2) இரணைமடுக்குளம்    3) பராக்கிரமபாகு சமுத்திரம்

**32)** உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்ட எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம்    2) உதிப்பு    3) உடலைத் தளர்த்தல்

**33)** தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன்    2) வாளேந்திய சிங்கம்    3) நெற்கதிர்

**34)** பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976    2) 1851    3) 1815

**35)** வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு    2) இறப்பர், தாழம்பூ    3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6    2) 8    **19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130    2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745    **23.** 455
**24.** 11100ml / 1100ml    **25.** ரூபாய் 144.00
**26.** 1) 190    2) 100    3) 290
**27.** 15 : 30    **28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1    **31.** 2    **32.** 3
**33.** 2    **34.** 3    **35.** 2

## கல்வி tv CHANNEL-1 — 16.06.2022 வியாழக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

## கல்வி tv CHANNEL - 2 — 16.06.2022 வியாழக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# மின்சாரம் தாக்கியதில் குடும்பப் பெண் மரணம்!

மட்டக்களப்பு, ஜூன் 16

மின்சாரம் தாக்கிக் குடும்பப் பெண்ணொருவர் மரணமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டம், வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காவத்தமுனை துறையடி வீதியைச் சேர்ந்த 51 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தாயான அஹமது உசனார் லத்தீபா உம்மா என்பவரே நேற்று காலை 5.30 மணியளவில் இவ்வாறு மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

வீட்டின் முன்பகுதியில் அமைந்திருந்த தகரக் கொட்டிலுக்கு மேலாகச் சென்ற மின்சார இணைப்பில் ஏற்பட்ட மின்கசிவு காரணமாக இந்த மரணம் நிகழ்ந்துள்ளது எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

மரணமடைந்த பெண்ணின் உடல் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை வாழைச்சேனைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)



# பனங்காடு கண்ணகி அம்மன் ஆலயத்தில் வைகாசி பூரணை திருக்குளிர்த்தி சடங்கு!

அம்பாறை, ஜூன் 16

கண்ணகி வழிபாட்டுக்கு பிரசித்தி பெற்ற அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று பனங்காடு கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த வைகாசி பூரணை திருக்குளிர்த்தி சடங்கு நேற்று முன் தினம் மாலை பெருந்திரளான மக்களின் அரோகரா வேண்டுதலின் மத்தியில் இடம்பெற்றது.

கண்ணகி வரலாற்றுடன் தொடர்புடைய கண்டிய மன்னரின் மானியம் பெற்றதும் முக்காவிய புகழ் பெற்றதும் பொற்புறா வந்த காவியம் பாடப்பட்டதுமான இவ்வாலயத்தின் திருக்குளிர்ச்சி திருக்கதவு திறக்கும் வழிபாடுகளுடன் ஆரம்பமானது.

தொடர்ந்து 12ஆம் திகதி வரை நடைபெற்ற விசேட அபிசேக மூன்று காலப்பூஜைகளுடன் இடம்பெற்று 13ஆம் திகதி இரவு இடம்பெற்ற கல்யாணக்கால் நடும் நிகழ்வுடனும் நேற்று 14ஆம் திகதி இடம்பெற்ற திருக்குளிர்த்தி மற்றும் பக்தர்களின் நேர்கடன் பொங்கல் ஆகியவற்றுடன் நேற்று நடைபெற்ற கவடாப்பிட்டி பிள்ளையார் ஆலய பொங்கல் மற்றும் ஐயனார், வைரவர், நாகேஸ்வரர் பூசையுடனும் நிறைவுற்றது.

திருக்குளிர்த்தியை முன்னிட்டு நேற்று முன் தினம் காலை ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன் தலைமையிலான பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் அக்கரைப்பற்று அன்புத்தோழர்கள் அமைப்பு புண்ணியமூர்த்தி நவனீதன் உள்ளிட்டவர்கள் மோர்ப்பந்தல் அமைத்து தாகசாந்தி ஏற்பாட்டினை மேற்கொண்டனர்.

அத்தோடு ஆலய நிர்வாகத்தின் ஏற்பாட்டில் மாபெரும் அன்னதானமும் வழங்கப்பட்டது.

இதேவேளை, ஆலயத்தில் விநாயகர் பொங்கல் வழிபாட்டுக்கான பூசைகள் நடைபெற்றதன் பின்னர் பொதுமக்கள் பொங்கலிடும் வேலைகளில் ஈடுபட்டதுடன் திருக்குளிர்ச்சி வழிபாடுகள் ஆரம்பமாகின.

பரிவார ஆலயங்களுக்கான பூசையை தொடர்ந்து கல்யாணக்கால் பந்தலுக்கான பூசை நடைபெற்றதன் பின்னர் அம்மனை குளிர்ச்சிப்படுத்தும் பாடல்கள் பாடப்பட்டு குளிர்ந்தருளல் பூசை இடம்பெற்றது.

பின்னர் அம்மனவள் அடியார்களுக்கு அருள்வழங்கும் வகையில் கல்யாணக்கால் பந்தலை சுற்றி ஆலய பூசகரால் வலம் கொண்டு செல்லப்பட்டாள். இதன்போது அங்கு கூடியிருந்த ஆயிரக்கணக்கான அடியார்கள் குலவை சத்தத்துடன் ஆரோகரா எனும் வேண்டுதலையும் வானைப்பிளக்க வேண்டி நின்றனர்.

நிறைவாக அம்மன் மீது குளிர்ந்தருளச் செய்யப்பட்ட நீர் மக்கள் பக்தர்கள் மீது ஆலய பூசகரால் தெளிக்கப்பட்டதன் பின்னர் பூசைகள் நிறைவடைந்தன. (அ)



# மட்டு. எரிபொருள் நிலையம் முன்பாக பொதுமக்கள் திரண்டு ஆர்ப்பாட்டம்!

## கலகமடக்கும் பொலிஸார் அடித்து விரட்டினர்

மட்டக்களப்பு, ஜூன் 16

**மட்டக்களப்பு பார் வீதியில் உள்ள கிழக்கு பிராந்திய பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு எதிரே உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாக பொதுமக்கள் மேற்கொண்ட போராட்டம் கலகமடக்கும் பொலிஸார் அடித்து விரட்டியதை தொடர்ந்து முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. இதனைத் தொடர்ந்து பெற்றோல் விநியோக நடவடிக்கைகளை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முன்னெடுத்தது.**

இதன்போது அந்தப் பகுதியில் குழப்பம் விளைவிக்க முயன்றதாக கூறி மூன்று பேர் மட்டக்களப்பு தலைமையக பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன் தினம் நள்ளிரவு தொடக்கம் பார் வீதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோலை பெற்றுக் கொள்வதற்காக மோட்டார் சைக்கிள்களும் ஓட்டோக்களும் நீண்ட வரிசையில் நின்றுள்ளன.

இந்த நிலையில் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடமையிலிருந்த யாரும் எந்த தகவலும் வழங்காத நிலையில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு தொடக்கம் நேற்றுக் காலை முதல் மக்கள் நீண்ட வரிசையில் பெற்றோலுக்காக காத்திருந்துள்ளனர்.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் வழங்கப்படாது எனவும் வேறு ஒரு எரிபொருள் நிரப்பு நிலையத்திலேயே எரிபொருள் வழங்கப்படவுள்ளதாகவும் அங்கு தெரிவிக்கப்பட்ட நிலையில், குறித்த பகுதியில் வரிசையில் நின்ற மக்களுக்கும் எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்களுக்குமிடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

நான்கு தினங்களுக்கு முன்னர் தாம் பணம் செலுத்தியதாகவும் இன்னும் எரிபொருள் வரவில்லையெனவும் மக்களுக்கு தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து பிராந்திய பெற்றோலிய கூட்டுத்தாபனத்திலிருந்து ஏனைய எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருட்களை கொண்டுசெல்வதை தடுத்து அப்பகுதியில் மக்கள் போராட்டம் நடத்தினர்.

குறித்த எரிபொருள் நிலையத்தினரால் எந்தப் பணமும் செலுத்தப் படவில்லையெனவும் ஏனைய பகுதிகளில் பணம் செலுத்திய எரிபொருள் நிலையங்களுக்கு எரிபொருட்களை அனுப்ப வழியேற்படுத்துமாறும் பொலிஸார் கூறினர்.

அந்த பணத்தைச் செலுத்துவதாகவும் இந்த எரிபொருள் நிலையத்துக்கு எரிபொருளை வழங்க நடவடிக்கையெடுக்குமாறும் இல்லாதுவிட்டால் எரிபொருள் வாகனங்கள் செல்ல அனுமதிக்கமாட்டோம் எனவும் மக்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது கலகமடக்கும் பொலிஸார் வரவழைக்கப்பட்டு அங்கிருந்தவர்கள் கலைக்கப்பட்டு எரிபொருள் வாகனங்கள் பொலிஸ் பாதுகாப்புடன் கொண்டு செல்லப்பட்டன.

இதன்போது குறித்த பெற்றோல் கொண்டுசெல்லும் வாகனங்களை மறித்து போராட்டம் நடாத்த முற்பட்ட மக்கள் தள்ளி பொலிஸார் அவர்களை விரட்டினர்.

இந்த நிலையில் அப்பகுதியில் குழப்பங்களை ஏற்படுத்திய குற்றச்சாட்டின் அடிப்படையில் மூன்று பேர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (அ)

# குருதி கொடையாளர் தினம் கல்முனையில் அனுஷ்டிப்பு

அம்பாறை, ஜூன் 16

உலக குருதிக் கொடையாளர் தினம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கல்முனை ஆதார வைத்தியசாலையில் அனுஷ்டிக்கப்பட்டது.

கல்முனை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியகலாநிதி மருத்துவர் இரா. முரளீஸ்வரன் தலைமையில் இந்தத் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த 6 வருட காலங்களில் வைத்தியசாலையில் குருதியை தானமாக வழங்கிய சுமார் 100 பேர் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.



இந்நிகழ்வுக்கு, பிரதம அதிதியாக கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் கலாநிதி மூத்ததம்பி கோபாலரத்தினம் கலந்து சிறப்பித்தார்.

மேலும், அவர் செயலாளராக பதவி உயர்வு பெற்றமையை முன்னிட்டு கௌரவிப்பு நிகழ்வும் அங்கு இடம்பெற்றது.

இந்நிகழ்வில், சிறப்பு அதிதிகளாக எகெட் நிறுவன பணிப்பாளர் வண. பிதா ஏ.ஜேசுதாசன் , பிரபல தொழிலதிபர் சொர்ணம் கூட்டு நிறுவன பணிப்பாளர் எம்.விஸ்வநாதன் , வைத்திய நிபுணர்கள் , வைத்திய அதிகாரிகள் தாதிய பரிபாலகிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (அ)

# பட்டா மோதியதில் ஒருவர் படுகாயம்

திருமலை, ஜூன். 16

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சுற்றுலா பிரயாணம் மேற்கொண்ட ஒருவர் பட்டா லொறியொன்று மோதியதில், அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலனறுவைப் பகுதியைச் சேர்ந்த ஐ.கான்ஸ்க் சேனாரத்ன (வயது-19) என்பவரே அதிதீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

மேலும், பொலனறுவையிலிருந்து திருகோணமலைக்கு சுற்றுலா சென்ற பஸ் கந்தளாய் குளத்தை அண்டிய பகுதியில் நிறுத்திப் பார்வையிட்டுக் கொண்டிருந்தபோது, அதில் ஒருவர் பிரதான வீதியை கடக்க முற்பட்ட வேளையில் வேகமாக வந்த பட்டா வாகனத்துடன் மோதியதில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# கைக்குண்டு மீட்பு

திருமலை, ஜூன் 16

திருகோணமலை மாவட்டத்தின் அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்போகம பகுதியில் நேற்றுமுன்தினம் கற்பாறைகளுக்குள் மறைத்து வைத்திருந்த நிலையில், கைக்குண்டு ஒன்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

கந்தளாய் குளத்தை அண்டிய பகுதியில் போடப்பட்டிருந்த கருங்கற்பாறைகளுக்குள்ளே இந்த கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

அக்போபுர பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், கைக்குண்டை பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் அது மீட்கப்பட்டது. (அ)

ஈழநாடு





## 40 வருடங்களுக்குப் பின்னர் ஸ்பெயினில் கடும் வெப்பம்

மட்ரிட், ஜூன். 16

ஸ்பெயினில் கடந்த 40 ஆண்டுகளில் இல்லாதளவு அதிகாரபூர்வ கோடை காலத்துக்கு முன்னர் கடும் வெப்ப அலை பதிவாகியுள்ளதாக அந்நாட்டு காலநிலை ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

வட ஆபிரிக்காவில் இருந்து வரும் வெப்பக் காற்று அலைகளால் வெப்பநிலை அதிகரித்துள்ளதாக ஸ்பெயின் காலநிலை ஆய்வு நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஸ்பெயினின் பெரும்பாலான பகுதிகளில் ஜூன் 16 அல்லது 17 ஆம் திகதி வரை கடும் பாதிப்புக்களை வெப்ப அலை நீடிக்கும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

அதிகாரப்பூர்வமாக கோடை ஜூன் 21 அன்று தொடங்குவதற்கு ஒரு வாரத்துக்கு முன்பு இவ்வாறு அதிக வெப்ப அலை பதிவாகியுள்ளது.

மத்திய மற்றும் தெற்கு ஸ்பெயினின் சில பகுதிகளில் வெப்பநிலை 40 டிகிரி செல்சியஸை தாண்டி பதிவானது. இது 1981 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நாட்டில் அதிகாரபூர்வ கோடை காலத்துக்கு முன்னர் பதிவான அதிக வெப்பநிலை என வானிலை ஆய்வு நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் ரூபென் டெல் காம்போ தெரிவித்துள்ளார். (அ)

## சவூதி செல்கிறார் பைடன்

நியூயோர்க், ஜூன். 16

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் முதல் மத்திய கிழக்கு பயணத்தின் விவரங்களை வெள்ளை மாளிகை உறுதிப்படுத்தியுள்ளது.

அதன்படி சர்ச்சைகளுக்கு மத்தியில் சவுதி அரேபியா செல்லும் அவர் சவுதி இளவரசர் முகமது பின் சல்மானுடன் அவர் சந்திப்புக்களை மேற்கொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி குறித்த பயணம் ஜூலை 13 மற்றும் 16 க்கு இடையில் நடைபெறும் என பைடன் அரசாங்கம் முன்னர் அறிவித்தது.

இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதி இஸ்ரேல் மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரைக்கும் விஜயம் செய்வார் என்றும் கூறப்பட்டுள்ளது.

மேலும் சவூதியின் சவுதி இளவரசர் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி இருதரப்பு, பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சினைகள் பற்றி பேசுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு ஒக்ரோபர் இரண்டாம் திகதி இஸ்தான்புல்லில் உள்ள நாட்டின் துணைத் தூதரகத்தில் வைத்து ஊடகவியலாளர் ஜமால் கஷோகி கொல்லப்பட்டார்.

இந்த சம்புபவத்தின் பின்னனியில் சவுதி இளவரசர் முகமது பின் சல்மானுக்கும் தொடர்பு இருப்பதாக தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அகதிகளோடு றுவாண்டா புறப்பட்ட முதல் விமானம் இறுதி நிமிடம் ரத்து!

### ஐரோப்பிய நீதிமன்றத் தலையீட்டால்

லண்டன், ஜூன். 16

றுவாண்டாவுக்கு முதல் தொகுதி புகலிடக் கோரிக்கையாளர்களை ஏற்றிச் செல்லவிருந்த பிரிட்டிஷ் விமானத்தின் பயணம் கடைசி நிமிடத்தில் ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

பிரான்ஸைத் தளமாகக் கொண்ட மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய நீதிமன்றம் வழங்கிய ஒர் உத்தரவை அடுத்தே அகதிகளது விமானப்பயணம் ரத்தாகியிருக்கிறது.

இந்த விவகாரத்தில் பிரிட்டிஷ் நீதிமன்றங்கள் ஒர் இறுதித் தீர்மானத்தை எடுக்கும் வரை புகலிடக் கோரிக்கையாளர்களைக் கிஹாலிக்கு அனுப்பிவைக்கும் நடவடிக்கை தாமதப்படுத்தப்படவேண்டும் என்று ஐரோப்பிய நீதிமன்றம் கேட்டிருக்கிறது.

பொறிஸ் ஜோன்சன் அரசின் சர்ச்சைக்குரிய புகலிடக் கொள்கைக்கு ஐரோப்பிய நீதிமன்றத்தின் இந்தத் தலையீடு ஒரு பின்னடைவு என்று கருதப்படுகிறது. எனினும் உள்துறை அமைச்சர் பிரதீ பட்டேல், அடுத்த விமானம் கிஹாலி புறப்படுவது உறுதி என்று தெரிவித்திருக்கிறார்.ஐரோப்பிய நீதிமன்றத்தின் தலையீடு குறித்து பிரிட்டிஷ் அரசு அதிர்ச்சியும் அதிருப்தியும் வெளியிட்டுள்ளது.



பிரிட்டிஷ் அரசு றுவாண்டா அரசுடன் செய்து கொண்டுள்ள உடன்படிக்கையின் படி சட்டவிரோதமான வழிகளில் பிரிட்டனுக்குள் நுழைந்து புகலிடம் கோருவோர் இனிமேல் கிஹாலிக்கு அனுப்பிவைக்கப்பட்டு அங்குள்ள விசேட வதிவிடங்களில் தங்கவைத்தே பராமரிக்கப்படவுள்ளனர். இந்தத் திட்டத்துக்கு உள்நாட்டிலும் சர்வதேச மட்டங்களிலும் கடும் எதிர்ப்புக் கிளம்பி உள்ளது. (அ)

# ‘குரங்கு அம்மை’ பெயரை மாற்ற சுகாதார அமைப்புக்கு பரிந்துரை

லண்டன், ஜூன்.

மங்கிபொக்ஸ் என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படு கின்ற வைரஸின் பெயரை மாற்றுமாறு உலக சுகாதார நிறுவனத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.


‘பாரபட்சம்’ மற்றும் ”இழிவுபடுத்தும்” விதமான பெயர் குறியீட்டை மாற்றவேண்டியது அவசர தேவையாகும்

என்று ஆபிரிக்கா உட்பட சில நாடுகளைச் சேர்ந்த அறிவியலாளர் குழு ஒன்று உலக சுகாதார அமைப்பிடம் கேட்டுள்ளது.

குரங்கு வைரஸ் ஆபிரிக்காவில் இருந்து பரவுவதாக நோயுற்ற ஆபிரிக்கச் சிறுவர்களது படங்களுடன் உல கின் பிரதான ஊடகங்களில் செய்திகள் பகிரப்படுவது பாரபட்சமானது, இழிவுபடுத்தும் விதமானது என்று ஆபிரிக்க நாட்டுத் தொற்று நோய் நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அதில் இனப் பாரபட்சமும் இருப்பது போலப்படுகிறது என்று ஆபிரிக்கத் தொற்று நோய் நிலையத்தின் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகளாவிய தொற்று நோய் ஒன்றுக்கு புவியியல் ரீதியான அல்லது விலங்குகள், இனம், நாடு போன்ற அடையாளத்தைக் குறிக்கின்ற பெயர் இடப்படுவது தவிர்க்கப்பட வேண்டும் என்பதை சுகாதார அமைப்பு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.



கொரோனா பெரும் தொற்று நோய் ஆரம்பித்த சமயத்தில் அது சீன வைரஸ் என்றும் வுஹான் வைரஸ் என்றும் வெவ்வேறுவித மான பெயர்களில் அழைக்கப்பட்டமை பலவித விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்தியிருந்தன.

அதன் பின்னர் சுகாதார அமைப்பு அதற்கு ”கோவிட் - 19” என்று அறிவியல் பெயரைச் சூட்டியது.

கொரோனா வைரஸின் திரிபுகளுக்குக் கிரேக்க இலக்கங்களைக் குறிக்கும் பெயர்கள் இடப்பட்டு வருகின்றன.

பெரியம்மை குடும்பத்தைச் சேர்ந்த குரங்கு அம்மை அதற்கான தடுப்பூசி கண்டறியப்படுவதற்கு முன்பாக உலகில் பல லட்சம் பேரின் உயிரிழப்புகளுக்குக் காரணமாக இருந்தது. மேற்கு மற்றும் மத்திய ஆபிரிக் காவின் பருவ மழைக் காடுகளில் எலிகள், மர அணில் கள் உட்பட பல விலங்குகளில் அந்த வைரஸ் காணப்பட்ட போதிலும் அதற்குக் குரங்கு அம்மை என்ற பெயர் எவ்வாறு வந்தது?

1958 இல் இந்த வைரஸ் மனிதர்களுக்குப் பரவுவ தற்கு முன்பாக டென்மார்க்கின் பரிசோதனைக் கூடங்களில் முதலில் குரங்குகளிலே கண்டறியப்பட்டது என்றும் அதன் காரணமாகவே அது குரங்கு வைரஸ் எனப் பெயர் பெற்றது என்றும் சொல்லப்படுகிறது.

பொதுவாக மத்திய மற்றும் மேற்கு ஆபிரிக்க நாடுகளில் மட்டுமே காணப்பட்ட குரங்கு அம்மை நோய் கடந்த மாதம் உலகின் பல நாடுகளிலும் கண்டறியப்பட்டது. இதுவரை உலகெங்கும் ஆயிரத்து 300 தொற்றுக்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்று சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. (அ)

# இரசாயன ஆலை ஒன்றுக்குள் சிக்கிய உக்ரேனியப் படைகள்

### சரணடைவதற்கு ரஷ்யா கெடு

கீவ், ஜூன். 16

உக்ரைன் கிழக்கில் ரஷ்யாவின் முற்றுக்கைக்குள் உள்ள - சீவிரோடோனெட்ஸ்க் நகரின் அசோட் இரசாயன ஆலைக்குள் சிக்கியுள்ள உக்ரேனியப் படைகள் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு சரணடைய வேண்டும் என ரஷ்யா வலியுறுத்தியுள்ளது.

அசோட் இரசாயன தொழிற்சாலைக்குள் உக்ரேனியப் படைகளுடன் 500க்கும் மேற்பட்ட பொதுமக்களும் சிக்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் ஆலைக்குள் உள்ள உக்ரேனியப் படைகள் சரணடைய மொஸ்கோ நேரப்படி நேற்று புதன் கிழமை காலை 8 மணி வரை கெடு விதிக்கப்பட்டது.

புத்திசாலித்தனமற்ற தங்கள் எதிர்ப்பை நிறுத்தி விட்டு உக்ரேன் படைகள் ஆயுதங்களைக் கீழே போட வேண்டும். சரணடையும் உக்ரேனிய படையினர் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்படுவார்கள் என ரஷ்ய தேசிய பாதுகாப்பு முகாமைத்துவ மையத்தின் தலைவர் மிகைல் மிஜின்ட்சேவ் இன்ரபக்ஸ் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.



இதேவேளை, சீவிரோடோனெட்ஸ்க் பிராந்தியத்தில் உள்ள உக்ரேனியப் படைகளிடம் ஆயுதங்கள், வெடிமருந்துகளின் கையிருப்பு பெரும்பாலும் தீர்ந்துவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சீவிரோடோனெட்ஸ் நகரத்திற்கான கடைசிப் பாலம் ரஷ்ய படைகளால் நேற்று முன்தினம் அழிக்கப்பட்டது. இதனால் இந்தப் பகுதிக்கான விநியோகம் முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளது. இங்கு சிக்கியுள்ள மக்கள் வெளியேறுவதற்கான கடைசி வழியும் ரஷ்யப் படைகளால் துண்டிக்கப்பட்டுள்ளதாக உக்ரைனிய அதிகாரி ஒருவர் கூறினார்.

இவ்வாறான நிலையில் சீவிரோடோனெட்ஸ்க்கைப் பாதுகாக்க உக்ரைனுக்கு அதிக கனரக ஆயுதங்கள் தேவை. இவற்றை அவசரமாக வழங்க மேற்கத்திய நாடுகள் முன்வர வேண்டும் என உக்ரைன் அரசு அழைப்பு விடுத்துள்ளது.

இதேவேளை, கடந்த திங்கட்கிழமை நாட்டு மக்களுக்கான வழக்கமான உரையில் பேசிய உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி, ரஷ்யப் படைகள் மூலோபாய கிழக்கு நகரத்தை கைப்பற்றி வருவதால் சீவிரோடோனெட்ஸ்க் போரில் உயிரிழப்புக்கள் அதிகமாக இருக்கும் என தெரிவித்தார். (அ)

### இலங்கையுடனான ஒருநாள் போட்டி:

# மக்ஸ்வெல் அதிரடி ஆஸி. அணி வெற்றி



கண்டி, ஜூன் 16

6 சிக்ஸர்கள்இ 6 பௌண்ட்ரிகள் என மக்ஸ்வெல் காட்டிய அதிரடியால் 2 விக்கெட்களால் இலங்கை அணியை வெற்றி கொண்டது அவுஸ்திரேலிய அணி.

இலங்கை வந்துள்ள அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டி நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணியின் தலைவர் தசுன் சானக முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இலங்கை அணிக்கு தொடக்கம் கொடுத்த தனுஷ்க குணதிலகஇ பதும் நிஸங்க ஆகியோர் சிறப்பான ஆட்டத்தை ஆடினர். இவர்கள் இருவரும் முதல் விக்கெட்டுக்காக 115 ஓட்டங்களை சேர்த்தனர். இருவரும் நிதானமாக - விரைட்டக்கூடிய பந்துகளை எல்லைக்கோட்டுக்கு அனுப்பிக் கொண்டே இருந்தனர். இதனால்இ அணியின் ஓட்ட எண்ணிக்கை சீரான வேகத்தில் உயர்ந்து கொண்டே இருந்தது.

19ஆவது ஓவரில் இருவரும் அரைச்சதங்களை எட்டி னர். நிஸங்க 61 பந்துகளிலும்இ குணதிலக 50 பந்துக ளிலும் தமது அரைச்சதங்களை எட்டினர். தொடர்ந்த ஆட்டத்தில்இ ஓட்டம் ஒன்றைப் பெற முனைந்து குண திலக ரன் அவுட் ஆனார். அவர் 7 பௌண்ட்ரிகளுடன் 55 ஓட்டங்களை குவித்திருந்தார். அவரைத் தொடர்ந்து பதும் நிஸங்க அகரின் பந்தில் பின்ஞ்சிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். அவர்இ 6 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 56 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

இதன் பின்னர் வந்த குசல் மெண்டிஸ் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இந்நிலையில், தனஞ்சய டி சில்வா 7, சரித் அசலங்க 37, தசுன் சானக 6, சாமிக கருணாரத்ன 7 ஓட்டங்கள் என ஆட்டமிழந்தனர். எனினும், 8ஆவது விக்கெட்டுக்காக இணைந்த வனிந்து ஹசரங்க மெண்டிஸூக்கு ஈடுகொடுத்து ஆடினார்.

49ஆவது ஓவரில் ரிச்சர்ட்சன் வீசிய ஓவரில் 58 பௌண்ட்ரிகளை விளாசினார் ஹசரங்க. அவர், 19 பந்துகளில் 37 ஓட்டங்களைக் குவித்து இறுதிப் பந்தில் ஆட்டமிழந்தார்.

இறுதியில் 50 ஓவர்களில் 7 விக்கெட்களை மட்டும் இழந்து இலங்கை அணி 300 ஓட்டங்களை எடுத்தது.

குசல் மெண்டிஸ் 8 பௌண்ட்ரிகள் ஒரு சிக்ஸருடன் 86 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

ஆஸியின் பந்துவீச்சில் லபுசாக்னேஇ அகர் ஆகியோர் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆட ஆரம்பித்த அவுஸ்திரேலிய அணிக்கு வோர்ணர் ஓட்டம் எதுவுமின்றி ஆட்டமிழந்தார். எனி னும் இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த பின்ஞ், ஸ்மித் அபாரமாக ஆடினர். இருவரும் இணைந்து 50 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றனர்.

இதனிடையே போட்டி மழையால் தடைப்பட்டது. சிறிது நேரத்தின் பின்னர் போட்டி ஆரம்பமாகியபோது டக்வேர்த் - லூயிஸ் முறைப்படி 44 ஓவர்களில் 282 ஓட்டங்கள் வெற்றி இலக்காக ஆஸி. அணிக்கு நிர்ணயிக் கப்பட்டது.

தொடர்ந்து ஆடிய பின்ஞ் - ஸ்மித் இணை ஓட்டங் களை சேர்த்தனர். 44 ஓட்டங்களுடன் பின்ஞ் ஆட்ட மிழந்ததை தொடர்ந்து களம் புகுந்தார் லபுசாக்னே. அரைச்சதம் கடந்த ஸ்மித் 53 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

தொடர்ந்துஇ லபுசாக்னே - ஸ்ரொய்னிஸ் இணைப் பாட்டத்தை ஏற்படுத்தினர். எனினும் அவர்களாலும் அதிக நேரம் தாக்குப்பிடிக்க முடியவில்லை. லபுசாக்னே 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்கஇ ஸ்ரொய்னிஸ் 44 ஓட்டங்களுடன் வெளியேறினார். தொடர்ந்து அலெக்ஸ் காரி 21 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

இந்நிலையில்இ அடுத்து வந்த மக்ஸ்வெல் அதிரடி யாக ஆடினார். அவரின் அபார ஆட்டத்தால் ஆஸி. அணி இலகுவெற்றி பெற்றது. 42.3 ஓவர்களில் அந்த அணி 8 விக்கெட்களை மட்டும் இழந்து 282 ஓட்டங் களைப் பெற்றது.

மக்ஸ்வெல் 6 சிக்ஸர்கள்இ 6 பௌண்ட்ரிகளை விளாசி 80 ஓட்டங்களை 51 பந்துகளில் குவித்தார்.

இலங்கையின் பந்துவீச்சில் வனிந்து ஹசரங்க 4 விக்கெட்களையும்இ டுனித் வெல்லாலகே 2 விக்கெட் களையும் வீழ்த்தினர்.

போட்டியின் நாயகனாக மக்ஸ்வெல் தெரிவானார். (ஐ)

## உலகக் கிண்ண உதைபந்தாட்டம் தகுதி பெற்றது கோஸ்டாரிக்கா!

புவனஸ்அயர்ஸ், ஜூன் 16

உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடருக்கு இறுதி அணியாக கோஸ்டாரிக்கா தகுதி பெற்றுள்ளது.

32 அணிகள் பங்கேற்கும் 22ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடர் கட்டார் நாட்டில் எதிர்வரும் நவம்பர் 21ஆம் திகதி முதல் டிசெம்பர் 18ஆம் திகதி வரை நடக்கிறது.

இந்தப் போட்டிக்கு தொடரை நடத்தும் கத்தார் நேரடி யாக தகுதி பெற்றது. தகுதி சுற்று போட்டிகள் மூலம் 30 அணிகள் உலகக் கிண்ணத் தொடருக்கு தகுதிபெற்றன.

இந்த நிலையில் கடைசி அணியாக கோஸ்டாரிக்கா தகுதி பெற்றது. மத்திய அமெரிக்க நாடான கோஸ்டாரிக்கா நேற்று முன்தினம் நியூசிலாந்துடன் மோதியது. இதில் 1-0 என்ற கோல் கணக்கில் வென்று உலக கிண்ணத்துக்கு தகுதி பெற்றது.

அந்த அணி 14 போட்டிகளில் 7 வெற்றி, 3 தோல்வி, 4 சமநிலையுடன் 25 புள்ளிகள் பெற்றது.

கோஸ்டாரிக்கா 6ஆவது முறையாகவும், தொடர்ந்து 3ஆவது முறையாகவும் உலக கிண்ணத் தொடருக்கு தகுதி பெற்றது. அந்த அணி 'இ' பிரிவில் இடம் பெற்றுள்ளது.

இந்தப் பிரிவில் வடஆபிரிக்கா, ஜேர்மனி, ஸ்பெயின், ஜப்பான் ஆகிய அணிகள் உள்ளன.



## நியூசிலாந்துடனான டெஸ்ட் இங்கிலாந்து அபார வெற்றி!

லண்டன், ஜூன் 16

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியை 5 விக்கெட்களால் வெற்றி கொண்டது இங்கிலாந்து அணி. இலக்கை விரட்டியபோது டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக ஓட்டவிகிதத்தை பெற்ற வீரர் என்ற பெருமையை பெயர்ஸ்ரோ பெற்றுள்ளார்.

இங்கிலாந்து சென்றுள்ள நியூசிலாந்து அணி டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது. முதல் போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்றது.

இரண்டாவது போட்டி நாட்டிங்ஹாமில் நடந்தது. இதில், நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது.

முதலில் துடுப்பெடுத்தடிய நியூசிலாந்து அணி, 145.3 ஓவர்களில் 553 ஓட்டங்கள் எடுத்தது. டரில் மிற் செல் 190, ரொம் பிளண்டல் 106 ஓட்டங்கள் எடுத் தார்கள்.

அண்டர்சன் 3 விக்கெட்களை வீழ்த்தினார். இதை யடுத்து துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 128.2 ஓவர்களில் 539 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட் களையும் இழந்தது. நியூசிலாந்து முதல் இனிங்ஸில் 14 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது. ரூட் 176, போப் 14 5ஓட்டங்கள் எடுத்தார்கள். நியூசிலாந்து அணியின் போல்ட் 5 விக்கெட்களை வீழ்த்தினார். இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி, 4ஆம் நாள் முடிவில் 69 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 224 ஓட்டங்கள் எடுத்தது.

5ஆம் நாளில் 84.4 ஓவர்களில் 284 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. மிற்செல் ஆட்டமிழக்காமல் 62 ஓட்டங்கள் எடுத்தார்.

பிரொட் 3 விக்கெட்களை வீழ்த்தினார்.

இங்கிலாந்து அணி வெற்றி பெற 299 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அதிரடியாக ஆடிய அந்த அணி 50 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 299 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றியை அடைந்தது.

பெயர்ஸ்ரோ 92 பந்துகளில் 7 சிக்ஸர்கள், 14 பௌண்ட்ரிகளுடன் 136 ஓட்டங்களும் ஸ்ரோக்ஸ் ஆட்டமிழக்காமல் 75 ஓட்டங்களும் எடுத்தார்கள்.

3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இங்கி லாந்து அணி 2-0 என முன்னிலை பெற்று தொடரைக் கைப்பற்றியுள்ளது. 3ஆவது டெஸ்ட், லீட்ஸ் மைதா னத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி தொடங்கும். (ஐ)



## தென்னாபிரிக்காவை வென்றது இந்தியா!

விசாகபட்டினம், ஜூன் 16

தென்னாபிரிக்காவை 48 ஓட்டங்களால் வெற்றி கொண்டது இந்திய அணி.

இந்தியா, தென் ஆப்பிரிக்கா அணி களுக்கு இடையி லான 3ஆவது இருபது - 20 போட்டி விசாகப்பட்டி ஸ்ரீனத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற தென்னா பிரிக்கா பந்து வீச்சைத் தெரிவு செய் தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 179 ஓட்டங்கள் எடுத்தது. ருதுராஜ் கெய்க்வாட் 57 ஓட்டங் களும், இஷான் கிஷன் 54 ஓட்டங்களும் எடுத்து ஆட்ட மிழந்தனர்.

கடைசிக் கட்டத்தில் ஹார்திக் பாண்ட்யா அதிரடியாக ஆடி 31 ஓட்டங்கள் எடுத்தார். இதையடுத்து, 180 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தென்னாபிரிக்கா களமிறங்கியது.

இந்திய பந்துவீச்சாளர்கள் கட்டுக்கோப் பாக பந்து வீசியதால் சீரான இடைவெளியில் விக்கெட்கள் வீழ்ந்தன.

அணித் தலைவர் பவுமா 8 ஓட்டங்கள், ஹென்றிக்ஸ் 23 ஓட்டங்கள், பிரிடோரியஸ் 20 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

வான் டேர் டுசன் ஓர் ஓட்டத்துடன் வெளியேறி னார். கிளாசன் 29 ஓட்டங் களில் ஆட்டமிழந்தார். இறுதியில், தென்னா பிரிக்கா அணி 141 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

இதன்மூலம் 48 ஓட்டங்கள் வித்தியாசத் தில் இந்தியா வெற்றி பெற்றது.

இந்தியா சார்பில் ஹர்ஷல் பட்டேல் 4 விக்கெட்டும், சஹல் 3 விக்கெட்டும், அக்சர் படேல், புவனேஷ்வர் குமார் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

(ஐ)

# மரண அறிவித்தல்

**மலர்வு**
**06 - 07 - 1942**



**உதிர்வு**
**09 - 06 - 2022**

# Dr.வீரகுமார் சண்முகநாதன்

மட்டக்களப்பு கோட்டைமுனையைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை வசிப்பிடமாகவும், கொழும்பு ராஜகிரிய ஆயுர் வேத வைத்தியசாலையில் விரிவுரையாளருமாக சேவையாற்றி பின்னர் இங்கிலாந்தில் வசித்து வந்தவருமான வைத்திய கலாநிதி உயர்திரு Dr.வீரகுமார் சண்முகநாதன் அவர்கள் கடந்த 09.06.2022 வியாழக்கிழமை அன்று இறைவனடி எய்தினார்.

அன்னார், காலஞ்சென்ற வீரகுமார் செல்வரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும், உமாதேவி சண் முகநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற பண்டிதர் நமச்சிவாயம் மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற வீரகுமார் சிவசுப்ரமணியம், பாலாம்பிகை ரட்னராஜா, வீரகுமார் சிறீஸ்கந்தராஜா, மற்றும் பவளம் ஞானமுத்து, யோகாம்பிகை சிவலிங்கம், மகேஸ்வரி குழந்தைவேல் ஆகியோரின் சகோதரரும், கணேஷ்வரன் சண்முகநாதன், லோகேஸ்வரன் சண்முகநாதன், இளஞ்செழியன் சண்முகநாதன், இளங்கோ சண்முகநாதன், அருள்மொழி புனிதச்சந்திரன் ஆகியோரின் அன்புத்தந்தையும், கனகா கணேஷ்வரன், வித்யா லோகேஸ்வரன், சுதர்ஷினி இளஞ்செழியன், சுபாஷினி இளங்கோ, பாஸ்கரன் புனிதச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், லக்ஸன், ஹரணி, சத்யா, நிலாயினி, சிந்து, சிவானி. ஆதவன், காவியன், இனியன் ஆகியோரின் பாட்டனாரும், நமசிவாயம் குழந்தை வேல், காலஞ்சென்ற Dr. நமசிவாயம் சத்தியமூர்த்தி, மற்றும் நமசிவாயம் கருணானந்தன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

**பார்வைக்கு :**
18.06.2022 - 1.00PM - 4.00PM
188 Alexandra Avenue, Harrow, HA2 9BN

**கிரியை :**
19.06.2022 - 8.30AM - 11.30AM
Ekta Centre, 366 Stag Lane, Kingsbury, London, NW99AA

**தகனம் :**
19.06.2022 - 12.00PM
Hendon Crematorium, Holders Hill Road, London, NW7 1NB

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொடர்புகளுக்கு:*
**கணேஷ் :** 0061425027001, **லோகேஸ்வரன் :** 0061431594766
**இளஞ்செழியன் :** 00447912493936, **இளங்கோ :** 0061455802655
**அருள்மொழி :** 00491735382793

*தகவல் :*
**குடும்பத்தினர்.**

## பொருளாதார...

நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தை, உலக உணவுத்திட்டம் மற்றும் உணவு மற்றும் விவசாய அமைப்பு ஆகிய கட்டமைப்புக்களின் மூலமான உதவிகள் என்பன தொடர்பாகவும் அவர் தெளிவு படுத்தியிருந்தார்.

அத்தோடு, பொருளாதார நெருக்கடியின் விளைவாக ஏற்படக்கூடிய வறுமை, மந்தபோசணைக் குறைபாடு உள்ளிட்ட சமூக ரீதியிலான தாக்கங்கள் குறித்தும் பிரதமர் தனது உரையில் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்த நிலையில், பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் இந்தக் கருத்துக்களை மேற்கோள்காட்டி தனது உத்தியோகபூர்வ ருவிட்டர் பக்கத்தில் கருத்து வெளியிட்டுள்ள மீனாக்ஷி கங்குலி, அரசியலமைப்பின் ஊடாக பாதுகாப்பை உறுதிப்படுத்தல், மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தல் ஆகியவையே கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கான அடிப்படைத் திறவுகோளாகும் என்று தெரிவித்துள்ளார். (அ)

## இலங்கையில்...

கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் தற்போதைய அரசியல், பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணவேண்டுமெனில் ஆட்சி மாற்றம் மிகவும் அவசியம். இது மக்களின் பிரதான வேண்டுகோளாக இருக்கின்றது.

ஏனெனில், இந்த அரசின் மீது மக்கள் நம்பிக்கையை முழுமையாக இழந்துவிட்டார்கள் என்று நான் கருதுகின்றேன்.

நாட்டின் தற்போதைய பிரச்னைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டுமாயின் நிச்சயமாக அரசில் மாற்றம் ஏற்பட வேண்டும். தற்போதைய அரசால் பிரச்னைகளுக்குத் தீர்வு காண முடியாது. அது வெளிப்படையாகத் தெரியவந்துள்ளது.

நாட்டினதும் மக்களினதும் நலனில் அக்கறை கொண்டுள்ள அனைவரும் திடசங்கற்பத்துடன் செயற்பட்டு ஒருமித்த தீர்மானங்களை எடுத்தால்தான் ஆட்சியில் மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

சர்வதேச சமூகமும் இந்தக் கருமத்தில் அக்கறை காட்டும் என்று நான் நம்புகின்றேன்.

ஏனெனில் தற்போதைய ஆட்சியில் ஒரு மாற்றம் ஏற்பட்டால்தான் சர்வதேச சமூகத்துக்கு எமது நாட்டின் மீது ஒரு நம்பிக்கை ஏற்படும். சர்வதேச சமூகம் சகல வழிகளிலும் எமது நாட்டுக்கு உதவிகளையும் வழங்கும்-என்றார். (அ)

## எரிபொருள்...

நின்றனர். எனினும் பிற்பகல் 3 மணியாகியும் பெற்றோல் வழங்கப்படவில்லை.

இதனால் பொறுமையிழந்த பொது மக்கள் ஏ-9 வீதி மற்றும், மன்னார் வீதி ஆகியவற்றை வழிமறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் குறித்த வீதிகளூடான போக்குவரத்து ஒருமணிநேரம் முழுமையாக ஸ்தம்பித்ததுடன், பதற்றமான சூழலும் ஏற்பட்டிருந்தது.

சம்பவ இடத்துக்கு வருகைதந்த வவுனியா பொலிஸார் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுற்பட்டனர். இதன்போது பொலிஸாருக்கும், பொதுமக்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது.

பின்னர் எரிபொருள் நிரப்பு நிலையத்தின் இருப்பை உறுதிப்படுத்துமாறு பொதுமக்களால் கோரப்பட்டது. இதனையடுத்து பொலிஸாரால் நிரப்பு நிலையத்தின் எரிபொருள் இருப்பு கண்காணிக்கப்பட்டது.

எனினும், குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் இருப்பு அற்ற நிலையில் காணப்பட்டது. இதனையடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் சற்று நேரத்தில் கலைந்து சென்றனர். (ஐ)

## இலங்கைக்கு...

தார் என்று கூறப்பட்டது.

இலங்கைக்கு உதவுவதற்கு அமெரிக்கா முன்வந்திருப்பது சந்தோசமளிக்கிறது என்று தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கு நன்றியையும் தெரிவித்துள்ளார். (ஐ)

## 12 கோடி...

காகவும் ஆதரவாகவும் இந்த நிதியை அமெரிக்கா வழங்க இணங்கியுள்ளது. இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் இதனை நேற்று தெரிவித்துள்ளார்.

இலங்கை பொருளாதாரம் வளர்ச்சியடைவதற்காகவும் மக்களுக்கு ஆதரவாகவும் கடந்த 70 வருடங்களாக அமெரிக்கா வெளிநாட்டு உதவி கடன்கள் மற்றும் வர்த்தக வாய்ப்புகளை வழங்கியுள்ளது.

இந்த அறிவிப்பு தனியார் துறையினருக்கு சிறந்த செய்தி என மேலும் தெரிவித்துள்ள அவர், அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபனத்தின் 12 கோடி அமெரிக்க டொலர் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகங்களை சென்றடையும். இந்தக் கடன்கள், முன்னணி தனியார் வங்கியான கொமர்ஷல் வங்கி ஊடாக வழங்கப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## அரசியல்...

வும் இல்லை. ரஞ்சித் மத்தும பண்டாரவால் தனி நபர் பிரேரணையாகக் கொண்டுவரப்பட்ட 21ஆவது திருத்தம் மாத்திரமே தற்போதுள்ள ஒரே ஒரு திருத்தம்.

உயர்நீதிமன்றத்தின் தீர்மானம் இன்னும் சில தினங்களில் வெளியிடப்படும் எனக் குறிப்பிட்ட அவர், பாராளுமன்றத்தின் மூன்றாவது வாரத்தில் அது குறித்து விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளலாம் எனவும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், நாட்டில் சீர்திருத்தங்களைவிட அரசியல் விளையாட்டுகளில் மூழ்கியிருப்பதால் 21 பற்றி விவாதிக்கப்படவில்லை. இரண்டாம்பட்ச கவனிப்பே இருக்கின்றது. தற்போதைய அரசியல் நெருக்கடிக்கான தீர்வு புதிய மக்கள் ஆணையிலேயே தங்கியுள்ளது. இந்த நெருக்கடிக்கு சில மாதங்களில் தீர்வு உண்டு என்று சில வீரர்கள் பெருமை பேசினாலும் கூட, உண்மையான நிலைப்பாடு அவ்வாறு இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

## மூன்று...

அந்த சங்கத்தின் தலைவர் அனில் ரஞ்சித் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய மின்சார தேவையை பூர்த்தி செய்யப் போதிய மின்சார உற்பத்தி இல்லை. தேவை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனால் திட்டமிட்ட மின் வெட்டுக்களை இன்னமும் 3 ஆண்டுகளுக்கு தொடர வேண்டும்.

மின் தேவையைப் பொறுத்தே மின் வெட்டு தீர்மானிக்கப்படுகின்றது. விநியோக அளவைவிட அதிகமாக இருந்தால் நாம் அதைப் பூர்த்தி செய்ய முடியாது. மின்வெட்டுக்கே செல்ல வேண்டும். தற்போது ஒருநாளுக்கு 2,800 மொகவாட்ஸ் மின்சாரம் தேவைப்படுகின்றது. இரவு நேரங்களில் மின்சார தேவை அதிகமாக இருக்கும்.

நிலைமையை சீராக்க, அரசு சூரிய சக்தி மின் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டும். இருப்பினும் மின்வெட்டை தவிர்க்க இது நிரந்தரத் தீர்வாக இருக்காது.

அதானி திட்டம் இப்போது தொடங்கப்பட்டாலும், மின்சாரம் கிடைக்க 3 ஆண்டுகளாகும். எனினும், காற்று வீசும் காலங்களிலேயே இது மின்சாரத்தை உற்பத்தி செய்யும்.

மின்சார சபை ஏற்கனவே 20 வருட மின் திட்டத்தை கொண்டு வந்தது. அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை எடுத்தால் எதிர்காலத்தில் மின்வெட்டு ஏற்படாது என்றும் கூறினார். (ஐ)

# 10,000 தொன் அரிசி அனுப்புகிறது சீனா

கொழும்பு, ஜுன் 16

இலங்கை சிறுவர்களுக்காக 10 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை வழங்குவதற்கு சீனா உறுதியளித்துள்ளது.

500 மில்லியன் யுவான் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 2,680 கோடி ரூபாய் பெறுமதியான இந்த அரிசி ஆறு கட்டங்களாக இலங்கையை வந்தடையும் என்று கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

முதல் மற்றும் இரண்டாவது தொகுதிகள் எதிர்வரும் 25 மற்றும் 30 திகதிகளில் கொழும்பை வந்தடையும் என்றும் தெரிவிக்கப்பட்டது. 10 ஆயிரம் தொன் அரிசியும் நாடு முழுவதும் உள்ள பாடசாலை உணவு திட்டத்தின் கீழ் சிறுவர்களுக்கு வழங்கப்படும் எனவும் சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது. (ஐ)

# வீட்டுக்குள் நுழைந்து பெண்ணை தாக்கிவிட்டு சங்கிலி அபகரிப்பு!

கிளிநொச்சி, ஜுன் 16

கிளிநொச்சி - திருவையாற்றில் வீடொன்றுக்குள் நுழைந்து பெண்ணை தாக்கி விட்டு சங்கிலியை அறுத்துச் சென்ற சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வீட்டிலிருந்த பெண்ணிடம் விலாசம் ஒன்றை காண்பித்து விசாரித்த நபர் ஒருவர், வீட்டிலிருந்து வெளியேறுவது போல் சென்றுவிட்டு, திரும்பி ஓடிவந்து பெண் அணிந்திருந்த 2 பவுண் சங்கிலியை அறுக்க முயன்றுள்ளார். அந்தப் பெண் சங்கிலியை அறுக்க விடாது தடுத்த நிலையில் பெண்ணை மூர்க்கத்தனமாக தாக்கிவிட்டு சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த பெண் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மன்னார் புதைகுழி அறிக்கை நேற்று மன்றில் சமர்ப்பிப்பு!

மன்னார், ஜுன் 16

மன்னார் சதொச வளாக மனிதப் புதைகுழியில் அகழ்வுப் பணியை முன்னெடுப்பது தொடர்பான அறிக்கை மன்னார் நீதிவான் நீதிமன்றத்திடம் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது.

மன்னார் நீதிவான் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று புதன்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அகழ்வுப் பணியை மேற்கொள்ளும் தொல்பொருள் திணைக்களத்தின் பேராசிரியர் ராஜ் சோமதேவவும் சட்ட மருத்துவ அதிகாரி ராஜபக்ஷவும் நேற்று மன்றில் முன்னிலையாகவில்லை. எனினும், அவர்களுடைய அறிக்கை, பதிவுத் தபால் மூலம் மன்னார் நீதிவான் நீதிமன்றத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

மனிதப் புதைகுழி வழக்கில் பாதிக்கப்பட்ட தரப்பினராக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்கு குறித்த அறிக்கையின் பிரதிகள் நேற்று வழங்கப்படவில்லை எனவும் பிறிதொரு தினத்தில் அதனை பெற்று, அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர்கள் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி குறிப்பிட்டார்.

மனிதப் புதைகுழியிலிருந்து ஏற்கனவே மீட்கப்பட்ட எச்சங்கள், தடயப் பொருட்களை பிரித்தெடுப்பதற்கு உசிதமான திகதியை எதிர்வரும் ஜூலை 20 ஆம் திகதி மன்றுக்கு அறிவிக்க வேண்டும் என மன்னார் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இதற்கமைய, இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் ஜூலை 20 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# 30 ஆயிரம் தொன் எரிபொருளுடன் 50 நாட்கள் தரித்துநிற்கும் கப்பல்!

கொழும்பு, ஜுன் 16

டொலர் இல்லாமையால் 30 ஆயிரம் தொன் எண்ணெயக் கப்பல் ஒன்று கடந்த ஏப்ரல் 26ஆம் திகதி முதல் 50 நாட்களாக கொழும்பு துறைமுகத்தில் தரித்துள்ளது என்று பெற்றோலிய தொழில்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

அந்தக் கப்பல் விடுவிக்கப்படாததால் நாள் ஒன்றுக்கு 18 ஆயிரம் டொலர்கள் தாமதக் கட்டணமாக விதிக்கப்படும் என்றும் தெரிய வருகின்றது.

இந்தக் கப்பலுக்கான கட்டணத்தை செலுத்தினால் நாட்டிலுள்ள 6 மின் உற்பத்தி நிலையங்களுக்கு எரிபொருளை வழங்க முடியும் என்றும் தொழில்சங்கங்கள் தெரிவித்தன.

## எரிவாயு...

விலையை போல அதிகரிக்கும் என ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன, ஆனால் சமீபத்தில் அந்த நிறுவனம் விலையை மிகவும் ஆபத்தான விதத்தில் அதிகரித்தது போல நாங்கள் அதிகரிக்கவில்லை எனவும் அவர் கூறினார். (ஐ)

## நான்...

அமைச்சரானால் முதலில் இந்த அரசாங்கத்தில் உள்ள அனைவரையும் சிறையில் அடைக்க வேண்டும். அதுதான் பிரச்னை.

ரணில் விக்ரமசிங்கவுக்கு முன்பாகவே நான் பிரதமராக பதவியேற்கவேண்டும் என்று கூறப்பட்டது. அப்போது எனக்கு எந்த நிபந்தனையும் இருக்கவில்லை.

செய்யவேண்டிய திட்டம் பற்றி பேசினேன். அந்த திட்டத்துக்கு ஜனாதிபதி உடன்படவில்லை.

இதனையடுத்து, ரணிலுக்கு பதவி வழங்கப்பட்டது. எனினும் அவர் எதுவுமே செய்யாமல் இருக்கிறார்" என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## மருந்து...

லிய ரம்புக்வெல குறிப்பிட்டுள்ளார்.

அத்தியாவசியமான 14 மருந்து வகைகள் தேவையானளவு கையிருப்பில் உள்ளன. எவ்வாறாயினும், மேலும் 186 மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. அவற்றை விரைவில் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் கெஹலிய தெரிவித்தார். (ஐ)

## அவுஸ்திரேலியா...

11 பெண்களும் 3 சிறார்களுமே இலங்கை கடற்படையினரால் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 07 ஆட்கடத்தல்காரர்களும் அடங்குவதாக கடற்படை தெரிவித்துள்ளது.

திருகோணமலை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் பயணித்த படகொன்றும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் இலங்கை கடற்படையினரால் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

ஈழநாடு
Eelanadu

# டீசல், பெற்றோல் தட்டுப்பாடு சில தினங்களில் அதிகரிக்கும்?

கொழும்பு, ஜூன் 16

எதிர்வரும் நாட்களில் டீசல் மற்றும் பெற்றோல் தட்டுப்பாடு அதிகரிக்கும் என பெற்றோலிய கூட்டுத் தாபன உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனவே, நாட்டில் எரி பொருள் வரிசைகள் மேலும் நீடிக்கும் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

சப்புகஸ்கந்த சுத்திக ரிப்பு நிலையத்தில் சுமார் 350 மெற்றிக் தொன் பெற்றோல் மற்றும் 800 மெற் றிக் தொன் டீசல் உற்பத்தி செய்யப் படுகிறது.

எனினும், அந்த அளவு கள் அன்றாட தேவைகளுக்கு போதுமானதாக இல்லை எனவும் பெற்றோலிய கூட்டுத்தாபன உள்ளக தகவல்கள் கூறுகின்றன. (அ)



## மரண அறிவித்தல்

தோற்றம் 26 - 06 - 1935



மறைவு 14 - 06 - 2022

### திருமதி தங்கநேசம் துரைரட்ணம் [நேசம்]

சாவகச்சேரி சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு 15 கிரான்பாஸ், சங்கத்தானை ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட தங்கநேசம் துரைரட்ணம் அவர்கள் 14.06.2022 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சங்கத்தானையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வியும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும்,காலஞ்சென்ற துரைரட்ணம் (Retired Senior Income Tax Officer) அவர்களின் அன்பு மனைவியும், நேரு (Retired Walmart Canada), வாசுகி (Retired Teacher Colombo, Canada), வினோபா (Senior Director- BOI Colombo) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யோகலிங்கம் (Retired Lecturer District Director of Agriculture DOA Srilanka - Amazon Canada), சந்திரபிரபா (Teacher Colombo) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான தங்கமணி, Dr. சிவானந்தம், சௌந்தரம் மற்றும் முத்துலட்சுமி(லண்டன்) ஆகியோ ரின் அன்புச் சகோதரியும்,காலஞ்சென்ற கனகரட்ணம் (Court Interpreter), நேசமணி (கனடா), காலஞ்சென்றவர்களான கந்தசாமி (Court Interpreter), தவேந்திரன் (Engineer) ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஜனனி (Purchasing Coordinator Canada) - பிரபாகரன் (Plant Manager Canada), நிரோஷ்கண்ணா (Finance Manager Canada) - றணுஜா (Pharmacist Canada), ரமேஷ்கண்ணா (Software Engineer Canada, USA) - அபிவர்ஷனி (Accountant Canada), சந்தோஷ்கண்ணா (System Consultant Canada) - மகிஷா (Youth Counsellor Canada), பிரசோதயா (Colombo Ladies college), சுபோதயா (Colombo Ladies college) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திபிஷா(கனடா), ஹரிஷ்ராம் (கனடா), தக்ஷ்வி (கனடா) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 16.06.2022 வியாழக்கிழமை அன்று மு.ப 11:00 மணிமுதல் பி.ப 12:00 மணிவரை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீட்டு முகவரி:
இல. 378, A9 வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
**நேரு - மகன்**

தகவல்:
**நேரு - மகன்** Mobile : +14163890748
**வாசுகி - மகள்** Mobile : +16475712694
**வினோபா - மகன்** Mobile : +94714414895
**ஜனனி - பேர்த்தி** Mobile : +14162091210
**நிரோஷ் - பேரன்** Mobile : +16477722374
**ரமேஷ் - பேரன்** Mobile : +14166847983
**சந்தோஷ் - பேரன்** Mobile : +16475492033

# ஹெரோயினுடன் ஒருவர் சிக்கினார்!

மட்டக்களப்பு, ஜூன் 16

காத்தான்குடி பிரதேசத்தில் 8 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 25 கிராம் 250 மில்லிக்கிராம் ஹெரோயினுடன் போதைப்பொருள் வியாபாரி ஒருவரை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை கைது செய்துள்ளதாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தெரிவித்தார்.

காத்தான்குடி கடற்கரை வீதியில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்கு அருகாமையில் வைத்துப் போதை பொருள் வியாபாரி ஒருவரை சுற்றிவளைத்து சோதனையிட்ட போது, அவரிடமிருந்து 8 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான 25 கிராம் 250 மில்லிக்கிராம் ஹேரோயின் போதைப்பொருளை மீட்டதுடன் பொலிஸார் அவரை கைது செய்தனர்.

குறித்த நபர் காத்தான்குடியைச் சேர்ந்தவர் எனவும், இவர் நீண்ட காலமாக போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுவந்துள்ளதாகவும், கல்முனையில் இருந்து காத்தான்குடிக்கு வியாபாரத்துக்காக ஹெரோயினை எடுத்து கொண்டு வந்துள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)

# சனத் நிஷாந்தவுக்கு பிணை

கொழும்பு, ஜூன் 16

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சனத் நிஷாந்த எம்.பி, சமன் லான் பெர்ணான்டோ உள்ளிட்ட மூவருக்கு நீதிமன்றால் பிணை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மே 9ஆம் திகதி காலிமுகத்திடல் மற்றும் அலரி மாளிகைக்கு முன்பாக இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் குறித்த மூவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், இது தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது கோட்டை நீதவான் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

அதற்கமைய, இரு சரீர மற்றும் தலா 10 மில்லியன் ரூபா ரொக்கப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (அ)









## மரண அறிவித்தல்

தோற்றம் 23 - 08 - 1952



மறைவு 13 - 06 - 2022

### செல்லத்துரை தவபாலச்சந்திரன்

கொக்குவில் மேற்கு அரசடியைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கு கே.கே.எஸ் வீதியை வதிவிடமாகவும், அவுஸ்திரேலியா South Strathfield, Sydney ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை தவபாலச்சந்திரன் அவர்கள் 13.06.2022 திங்கட்கிழமை அன்று சிட்னியில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை இரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசதுரை(சின்னக்கிளி), உத்திரம் தம்பதிகளின் பாசமிகு மருமகனும்,பாமினி அவர்களின் அருமை கணவரும், சுபேசன், Dr. சுஜித்தா, தாரணி ஆகியோரின் பாசமிகு தந்தையும்,காலஞ்சென்ற பரமேஸ்வரி, மல்லிகாதேவி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், விக்னஹரன், முரளிகிருஸ்ணா ஆகியோரின் அன்பு மாமனாரும்,காலஞ்சென்ற சந்திரசேகரம், சண்முகநாதன் (கொழும்பு), தயாபாரன்(யாழ்ப்பாணம்), பிரபாகரன் (கரன்), கிரிஜா (யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனரும்,கணேஷ், லைலா, அருண் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

பார்வைக்கு
Sunday, 19 Jun 2022 9:30 AM - 11:00 AM
Macquarie Park Cemetery and Crematorium Cnr Delhi Rd &, Plassey Rd, Macquarie Park NSW 2113, Australia

கிரியை
Sunday, 19 Jun 2022 11:00 AM
Macquarie Park Cemetery and Crematorium Cnr Delhi Rd &, Plassey Rd, Macquarie Park NSW 2113, Australia

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**விக்னஹரன் - மருமகன்**

தொடர்புகளுக்கு:
**விக்னஹரன் - மருமகன்** Mobile : +61433910515
**ஞானகுமார் - உறவினர்** Mobile : +61428437570
**சிவச்சந்திரன் - உறவினர்** Mobile : +61417064847
**கரன் - மைத்துனர்** Mobile : +61469084984
**தயாபரன் - மைத்துனர்** Mobile : +94779739680
**மல்லிகாதேவி - சகோதரி** Mobile : +94112364055

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.06.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து- வழங்குபவர் உளவள துனையாளர் யாழ் பாவாணன்
07.10 மணி: இயற்கைவழி-எஸ்.உதயசீலன்- சமுர்த்தி உத்தியோகஸ்தர்



7.15 மணி : கதைவழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ - மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : நலம்தானா-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்- பாண்டியநாடு, டானாகாரன் திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை

**இரவு**
7.00 மணி : சமையல் சமையல்



7.30 மணி : வெள்ளிடை நுட்பம்- தொழில்நுட்பம் பயன்பாடுபற்றிய நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : கச்சேரி ஆரம்பம்-இசை நிகழ்ச்சி
10.00 மணி : நேருக்கு நேர்-அரசியல் நிகழ்ச்சி

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**சிவ ஒளி**

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு